


# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 37 • 04.08.2019

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com




## போர்க்குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்பட மாட்டார்கள்

மகிந்த அறிவிப்பு

## தமிழினத்தை கருவறுக்கும்




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகரசபை உறுப்பினர் பார்த்திபன் இலக்கு மின்னிதழுக்கு பேட்டி

## ரணில் வகுத்த புதிய வியூகம் தகர்த்தெறிந்த சஜித் பிரேமதாச

பூமிகன்

## எழுக தமிழ்-2019

நிலாந்தன்

## சத்தமின்றி நடக்கும் இன அழிப்பு யுத்தம்

தீபச்செல்வன்





## இலகுவில் தீராது ஈரான் பிரச்சனை



வேல் தர்மா

# புலிகள் மக்கள் விடுதலைக்காக தங்கள் முழு வாழ்வையும் உவந்தளித்தவர்கள்



**சட்டத்தரணி மெலனி திசநாயக்கா**

விடுதலைப் புலிகளின் தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் வார்த்தைகளுக்கு அப்பாலானவை. அவர்கள் தங்கள் சொந்த மக்களுக்களின் விடுதலைக்காக தங்கள் முழு வாழ்வையும் உவந்தளித்தவர்கள் எனவும் சட்டத்தரணி மெலனி திசநாயக்கா தெரிவித்துள்ளார். சட்டத்தரணி மெலனி திசநாயக்கா தெரிவித்துள்ளார். தான் ஒரு சிங்களக்குடிமகளாக இலங்கையரசு எங்களிற்கு அளித்த பொய்யான கருத்துருவாக்கங்களால் விடுதலைப்புலி அங்கத்துவர்களை கொடுமையான பயங்கரவாதிகள் என்றே நம்புவது வழமை எனவும் அவர் கூறியுள்ளார். ஏன் விடுதலைப்புலிகள் அவர்களது இறுதி முயற்சியாக ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் ? ஏன் தமிழ் இளைஞர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொள்ளவும் அவர்களது சொந்த உரிமைக்காக யுத்தம் செய்வதையும் தேர்ந்தெடுத்தார்கள் ?

நேர்த்தியான ஒழுக்கக் கட்டுப்பாட்டைப் பேணியவர்கள் விடுதலைப்புலிகள். இது போன்ற நல்ல கட்டுக்கோப்பான இராணுவத்தினையோ



அல்லது அமைப்பினையோ பற்றி நான் ஒருபோதும் பார்த்தோ அல்லது கேட்டோ அறிந்ததில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இனப்பிரச்சனை விவகாரத்துக்கு ஒரு போரில்லாத முடிவைப் பெறுவதற்கு உண்மையான நம்பிக்கையுடன் சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் நுழைந்த போது, இலங்கை அரசாங்கம் குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகளுக்கு வைக்கப்படும் ஒரு பொறியாக வடிவமைத்ததாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



விடுதலைப் புலிகளது பலத்தையும் விடுதலைப்புலி வீரர்களது மனோபலத்தையும் சிதைப்பதற்கு மிகவும் வஞ்சகத்தனமும் தந்திரமும் கொண்ட பொறியாக அது

தொடர்ச்சி 4 ஆம் பக்கம் →

# தமிழ் மக்களுக்கு தேவையானவற்றை அரசிடம் கூட்டமைப்பு ஏன் பேரம் பேசி பெற்றுக்கொள்ளக்கூடாது

**விக்னேஸ்வரன் கேள்வி**

தற்போதைய பாராளுமன்றம் இன்னும் சில மாதங்கள் நீடிக்கப் போகும் நிலையில், தமிழ் மக்களுக்குத் தேவையான பலவற்றை தமிழ்த்



தேசியக் கூட்டமைப்பு ஏன் அரசாங்கத்துடன் பேரம் பேசி பெற்றுக் கொள்ளக்கூடாது என வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார். வாராந்தம் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு எழுத்து மூலம் வழங்கியுள்ள பதிலிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதிருக்கும் 16 பேரைக் கொண்ட ஒரு தமிழர் சார் கட்சியின் அங்கத்தவர்களாக எமது பிரதிநிதிகள் எதிர்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட முடியாது என்றால் ஏன் அவர்கள் இப்போதிருந்தே அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து ஒரு சிலவற்றையாவது பெற்றுக்கொள்ள முடியாது? என்றும் அவர் வினவியுள்ளார். கல்முனையில் தோல்வியடைந்தவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்தும் தோல்வியடையும் என்று எதிர்பார்க்காமல் தற்போது இணைந்திருக்கும் அவர்கள் தமிழ் மக்களுக்கான மிக அவசரமான பலவிடயங்களை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

மக்களின் நலன் சார்பாக அனைவரும் தற்போதிருந்தே சிந்திக்க ஆரம்பித்தால் எதிர்காலத்தில் மக்கள் சார்பாக பிரயோசனமாக நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று தான் கருதுவதாக விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.



# சிறீலங்காவில் தாக்குதல் நடக்கலாம்

## அமெரிக்கா எச்சரிக்கை

அடுத்து வரும் விடுமுறை நாட்களில் சிறீலங்காவுக்கு பயணம் செய்யும் அமெரிக்கப் பிரசைகள் தமது பாதுகாப்பு தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தீவிரவாதிகள் சிறு அளவிலான தாக்குதல்களை நடத்தலாமென்றும், பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தி செயற்படுமாறும் தூதரகத்தின் செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா இடங்கள், போக்குவரத்து நிலையங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், அரச அலுவலகங்கள், கோட்டல்கள், கேளிக்கை விடுதிகள், உணவகங்கள், வழிபாட்டுத் தலங்கள், பூங்காக்கள், முக்கிய விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்வுகள், கல்வி நிறுவனங்கள், விமான நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் பிற பொதுப் பகுதிகள் தீவிரவாதிகளின் தாக்குதல் இலக்காக இருக்கலாம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்க கூட்டமைப்பின் ஆதரவு அவசியப்படவேயில்லை

**பாராளுமன்ற உறுப்பினர் எச்.எச்.எம் ஹாரீஸ்**

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவிதமான தியாகங்களையும் செய்யவில்லை. எம்முடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை—யின்போது சம்பந்தன் முதலமைச்சர் பதவியையே கோரவில்லை. அமைச்சுப்பதவியொன்றையே மேலதிகமாக கோரினார் என்று மு.காவின் பிரதி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எச்.எம் ஹாரீஸ் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது,

நாம் அப்போதைய ஆட்சியாளர்களான மஹிந்த தரப்புடன் இணைந்துகொண்டபோது கிழக்குமாகாணத்தில் சுதந்திரக்கட்சியும், மு.காவும் தலா இரண்டரை வருடங்கள் ஆட்சி செய்வதென்று உடன்பட்டிருந்தோம். முதலில் சுதந்திரக்கட்சி முதலமைச்சர் பதவியைப் பெற்று ஆட்சி செய்து நிறைவுக்குவருகின்றபோது தான் 2015இல் சனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இதன்போது மு.காவும் கூட்டமைப்பும் ஐ.தே.மு வேட்பாளருக்கு ஆதரவை வழங்கினோம். அச்சமயத்தில் முதலமைச்சர் பதவியை எம்மைப்பொறுப்பெடுக்குமாறு கோரி மு.காவின் உறுப்பினர்கள் எம்முடன் இணைந்து கொண்டார்கள். ரிஷாட், அதவுல்லா, ஐ.தே.க தரப்புக்கள் என ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மை எம்மிடத்தில் தாராளமாக இருந்தது. எனினும் கிழக்கில் இருசமுகங்களின் நல்லிணக்கத்திற்கான முன்னுதாரணமாக இருப்பதாகவும் கூட்டமைப்பினை ஆட்சியின் பங்காளர்களாக்குவதற்காகவும் பேச்சுக்களை முன்னெடுத்தோம். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவிடத்தில் நாம் முதலமைச்சர் பதவியை ஏற்பதாகவும் அமைச்சுபதவி மற்றும் அவைத்தலைவர் பதவி ஆகியவற்றை கூட்டமைப்பிற்கு வழங்குவதாக எமது தலைமை கூறியது. அதன்போது கிழக்கு மாகாண தமிழ்த் தலைமைகளுடன் கலந்துரையாடிவிட்டு பதிலளிப்பதாக சம்பந்தன் ஐயா கூறிச்சென்றார்.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின்போது அவர் இரண்டு அமைச்சுப் பதவிகளைத் தருமாறு கோரினார். அதாவுல்லாவுக்கு வழங்கவிருந்த அமைச்சுப்பதவியை நாம் கூட்டமைப்பிற்கு வழங்கினோம். சம்பந்தன் ஐயா இந்த பேச்சுக்களின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முதலமைச்சர் பதவி பற்றி பேசியிருக்கவில்லை. கூட்டமைப்பின் தயவினால் ஆட்சி அமைக்கப்பட்டது என்பதை விடவும் மு.காவின் நல்லெண்ணத்திற்கான நடவடிக்கை உருவாக்கப்பட்ட ஆட்சி என்பதே யாதார்த்தமாகும் என்றார்.

# தாயகத்திலே பௌத்த ஆக்கிரமிப்புக்களுக்கு கூட்டமைப்பே பொறுப்பாளிகள்

**தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் சுட்டிக்காட்டு**



தமிழர் தாயகத்தை முழுமையாக பௌத்தமயமாக்கும் தொலைநோக்குடன் இலங்கை அரசு தீவிரமாக முன்னெடுத்து வரும் பௌத்த ஆக்கிரமிப்புக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பொறுப்பாளிகளாக உள்ளனர். அவர்களே அதற்கான பொறுப்புக்கூறலையும் செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் சுட்டிக்காட்டியுள்ளது. இவ்விடயம் குறித்து தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அநுராதபுரம் பௌத்த சமயத்தில் புனித நகரமாக அறிவிக்கப்பட்டதிலிருந்து தாயகத்தின் முகவாயிலான வவுனியாவில் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் ஊடாக பௌத்த சமயத்தின் பெயராலான ஆக்கிரமிப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தன.

போரின் பின்னரான சூழலில் முல்லைத்தீவிலும், மன்னாரிலும், கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும், கூட்டமைப்பின் தலைமையின் கோட்டையான திருமலையிலும், மட்டக்களப்பிலும், அம்பாறை என்று தமிழர் பிரதேசத்தின் மூலை முடுக்கெல்லாம் பௌத்த விகாரைகளையும் உருவச் சிலைகளையும் நிர்மாணிக்கும் பணிகளை இலங்கை அரசு தீவிரப்படுத்தி வருகிறது. போர் நிறைவுக்கு வந்து பத்து ஆண்டுகளாகியிருக்கின்றன. தற்போது வரையில் சிங்கள பௌத்த மேலாதிக்க வாதிகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த நிர்மானங்களில் ஆகக்குறைந்தது ஒன்றைக் கூட தடுத்து நிறுத்தி தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை பாதுகாத்திருக்கின்றோம் என்று கூறுவதற்கு எந்தவொரு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இயலுமை அற்றவர்களாக இருக்கின்றமையானது மிக வேதனைக்குரிய விடயமாகும். இவ்வாறிருக்க இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலய முன்னறலில் நடைபெற்ற கவனயீர்ப்பு பேரணியில் கலந்து கொண்ட மாவை சேனாதிராஜா, பௌத்த ஆக்கிரமிப்புக்கள் தடுக்கப்பட வேண்டும் என்றும் இந்தியா தலையீடுசெய்ய வேண்டும் என்ற பொருள்பட உரையாற்றியிருந்தார். இதேபோன்று தான் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனும்,சாந்தி சிறீஸ்கந்தராசாவும் இந்தியாவின் தலையீட்டினை கோரியிருக்கின்றார்.

போர் நிறைவுக்கு வந்து பத்து வருடங்களில் தமிழ்த் தேசிய அரசியலை நீக்கமுறச்செய்ததோடு இலங்கை அரசை இந்தியா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து பாதுகாக்கும் முனைப்புடன் செயற்பட்டதோடு பிராந்திய,சர்வதேச தரப்புக்களுடனான உறவுகளை வலுவாக்குவதிலிருந்து விலகியிருந்து விட்டு தற்போது நடுக்கடலில் கப்பல் மூழ்கும் நிலையை அடைந்ததும் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்த்தை கோரும் கூட்டமைப்பின் தன்நலம் சார்ந்த வியூகத்தை இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளும் தமிழ் மக்களும் உணர்வார்கள். இதுவொருபுறமிருக்க, பௌத்த சமயத்தின் பெயரால் ஆக்கிரமிப்புக்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றபோது கூட புதிய அரசியலமைப்பு வருகிறது என்று தமிழ் மக்கள் மத்தியில் கண்கட்டு வித்தை காட்டிக்கொண்டிருந்த கூட்டமைப்பினர் ஆகக்குறைந்தது இடைக்கால அறிக்கையிலாவது பௌத்தத்திற்கு முதன்மை தானம் வழங்குவதையாவது எதிர்த்திருக்கலாம். ஆனால் அதனைச் செய்திருக்கவில்லை.

வரவு செலவுத்திட்டங்களுக்கும், நம்பிக்கையில்லாப்பிரேணை நிறைவேற்றுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் போதும் தயாகப்பிரதேசங்களில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட பௌத்த நிர்மனங்களை முழுமையாக அகற்றவேண்டும்

தொடர்ச்சி 11 ஆம் பக்கம் →




# தமிழ்த் தலைமையின் தந்திரோபாயம் என்ன?

சிறீலங்காவில் சனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்துவிட்டது. பிரதான கட்சிகள் இரண்டும் வேட்பாளரை அறிவிப்பதில் தடுமாறி வருகின்றன. ஐ.தே.க. பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து உருவாக்கவுள்ள ஜனநாயக தேசிய முன்னணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது. பிரதான எதிர்க்கட்சியான பொது ஜன பெரமுன வேட்பாளரை 11 ஆம் திகதி அறிவிக்கவுள்ளது. அதுவும் சிறிய கட்சிகள் பலவற்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கின்றது. இந்த நிலையில் தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப்போகின்றன என்பது பிரதான கேள்வியாகவுள்ளது. கடந்த காலத் தேர்தல்களின்போது அதிகளவு பாடங்களைப் படித்தவர்கள் தமிழர்கள்தான். ஆனால், அந்தப்பாடங்களை படிப்பினையாக்கிக்கொண்டோமா?

2015 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் குறித்து இன்றும் பேசிக்கொள்கின்றோம். தமிழ் மக்களுடைய ஆதரவுடனேயே அந்த மாற்றம் இடம்பெற்றது. தங்களுடைய அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு ஒரு தீர்வை (மைத்திரி — ரணில்) அரசாங்கம் வழங்கும் என்ற நம்பிக்கையுடனேயே இந்த மாற்றத்துக்குத் தமிழர்கள் ஆதரவளித்தார்கள். இதில் முக்கிய பங்காற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களைக் கைப்பற்றி, எதிர்க்கட்சித் தலைமைப் பதவியையும் பெற்றது. வெற்றுக்காசோலையைக் கொடுப்பதுபோல, நிபந்தனைகளின்றி அரசை ஆதரித்தது. நான்கு வருடங்களாக காப்பாற்றியது. அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என இப்போது கூட்டமைப்பு சொல்கின்றது. இது தமிழர்களை ஏமாற்றும் உபாயம். இவ்வளவு காலமும் சிங்கள அரசாங்கங்கள்தான் தமிழ் மக்களை ஏமாற்றிவந்தன. இப்போது தமிழ்த் தலைமைகளும் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அரசின் மீதான கூட்டமைப்பின் சீற்றம் வெறும் நடிப்பு என்றே தமிழர்கள் சொல்லும் நிலைதான் உள்ளது. அரசியல் மாற்றத்தில் கூட்டமைப்பும் பங்காளியாக இருந்தமைக்கு இரண்டு காரணங்கள் சொல்லப்பட்டன. ராஜபக்ச ஆட்சியில் அனுபவித்த கொடுமைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அரசியல் தீர்வைக் கொண்டுவருவது உட்பட, தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொண்டுவருவதாக மைத்திரி — ரணில் கொடுத்த வாக்குறுதி. இந்த இரண்டும்தான். அந்த வாக்குறுதி எழுத்து மூலமானதல்ல. வாய்மூலமாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள். எழுத்து மூலமாகக் கொடுக்கும் வாக்குறுதிகளையே கிழித்தெறியும் வரலாற்றைக் கொண்டவர்கள் சிங்களத் தலைவர்கள்.

சிங்களத் தலைவர்கள் தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளிக் கொடுப்பார்கள். சிறுபான்மையினருடைய நலன்கள், உரிமைகள் தொடர்பானவையாக அவை இருந்தால் இவை பின்னர் கிடப்பில் போடப்பட்டுவிடும். இது வரலாறு. இறுதியாக கல்முனை விவகாரத்தில் கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு எழுத்துமூலமாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியே நிறைவேற்றப்படவில்லை. பிரதமர் ரணிலைப் பாதுகாக்கும் வகையில் வாக்களித்து, அதற்கான பிரதியுபகாரங்களைப் பெற்றுக்கொண்ட கூட்டமைப்பின் தலைமை இன்று அந்தப் பிரச்சினை குறித்து பேசமுடியாமல் தடுமாறுகின்றது. அரசாங்கத்துடன் "நல்லிணக்க அரசியல்" செய்யும் சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்களால், கன்னியா. செம்மலை, கல்முனை போன்ற சாதாரண பிரச்சினைகளுக்கே தீர்வைக்கொண்டுவர முடியவில்லை. வழக்கு விசாரணைகளின்றி சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலையை உறுதிப்படுத்த முடியவில்லை. இந்த நிலையில், அரசியல் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை அவர்களால் பெற்றுக்கொடுக்க முடியும் என இனிமேலும் நம்பிக்கொண்டிருக்க முடியாது.

சனாதிபதித் தேர்தலில் பலர் களமிறங்கினாலும் போட்டி இருவருக்கு இடையில்தான். இவர்களுக்கு சிறுபான்மை—யினருடைய வாக்குகள் அவசியம். தமிழ்ப் பகுதிகளை இலக்கு வைத்து அவர்கள் செயற்படத் தொடங்கிவிட்டனர். இரண்டு வருடத்தில் தீர்வு என யாழ்ப்பாணத்தில் வைத்து ரணில் சொல்லிவிட்டார். நான்கு வருடங்களாக நடந்தவைகள் அர்த்தமற்றவை என்பதுதான் அதன் அர்த்தம். தமிழ்த் தரப்பு இப்போது இரண்டாகியுள்ளது. கூட்டமைப்புக்கு மாற்றாக விக்கினேஸ்வரன் அணி களமிறங்கப்போகின்றது. இந்த இரு தரப்புக்களையும் இலக்கு வைத்து தென்னிலங்கைக் கட்சிகள் பேரம்பேச முன்வருவார்கள் என்பது உறுதி. அரசியல் இலக்கை அடைவதில் இவ்வாறான பேரங்களை தந்திரோபாயமாகக் கையாள்வது அவசியம். கடந்த காலங்களில் கூட்டமைப்புத் தலைமை வெற்றுக் காசோலையைக் கொடுத்தது. இப்போது, இந்த நிலைமைகளை தமிழ்த் தலைமை எவ்வாறு கையாளப்போகின்றது? தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையில் இதனை எவ்வாறு கையாள்வது என்பதில் ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் அவசியம். இதன் மூலம் உறுதியான முடிவை தமிழ்த் தலைமை எடுக்க வேண்டும்.

# சஜித்துக்கு ஆதரவளிப்பதில் கூட்டமைப்பிற்குள் குழப்பம்



சனாதிபதித் தேர்தலில் மகிந்த அணிக்கு எதிராக உருவாகவுள்ள தேசிய ஜனநாயக அணியின் சனாதிபதி வேட்பாளராக முன்னாள் சனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய பிரதித் தலைவருமான அமைச்சர் சஜித் பிரேமதாஸ நியமிக்கப்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவினை வழங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் சஜித் பிரேமதாஸவை தம்மால் ஆதரிக்க முடியாது என்று ஐ.தே.கவின் தென்மாகாணத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களிடத்தில் நேரடியாகவே தெரிவித்துள்ளனர். எனினும் கூட்டமைப்பின் யாழ் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சிவமோகன், சரவணபவன் உள்ளிட்டவர்கள் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதாக பொது வெளியிலேயே அறிவித்துள்ளனர்.

இதனைவிடவும் பங்காளிக்கட்சிகளான ரெலோ புளொட் ஆகியனவும் சஜித்துக்கு ஆதரவளிப்பதாக அவர் தரப்பிடம் தெரி—வித்துள்ளனர். இதனால் சனாதிதிபதி வேட்பாளர் தொடர்பில் ஐ.தே.க தரப்பினை ஆதரிப்பது என்ற பொதுப்படையான இணக்கப்பாடு இருந்தாலும் வேட்பாளராக யாரை ஆதரிப்பது என்பதில் கூட்டமைப்பினுள் பனிப்போர் தற்போதே ஏற்பட்டுள்ளது.

எனினும் சனாதிபதி வேட்பாளர் யார் களமிறங்குகின்றார் என்பதற்கு அப்பால் தமிழ் மக்கள் சார்ந்த நிபந்தனைகளை கூட்டமைப்பு கூட்டாக ஒன்றிணைந்து எழுத்து மூலம் தயாரித்து எந்த தரப்பு தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் எழுத்து மூலமான உடன்படிக்கையை ஏற்றுக்கொள்கிறதோ அந்த தரப்பிற்கே ஆதரவு வழங்கவேண்டும் என்று தமி;ழ் மக்கள் தகவல் வெளியிட்டுள்ளனர். ஆனால் தமிழ் மக்களின் உரிமைகளை முன்நிறுத்தி கூட்டமைப்பு இத்தகைய நிலைப்பாட்டை எடுப்பது என்பது சந்தேகமே என்று தாயக உறவுகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# ஐரோப்பிய ஒன்றியக்குழு சிறீலங்கா வருகிறது




ஐரோப்பிய ஒன்றிய தலைமையகத்தின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் தேர்தல், சட்ட மற்றும் பாதுகாப்பு துறைகளில் நிபுணத்—துவம் வாய்ந்த மூன்று சுயாதீன வல்லுநர்கள் அடங்கிய குழு ஆய்வு பணியை மேற்கொள்—வதற்காக எதிர்வரும் 5ஆம் திகதி இலங்கை வரவுள்ளது. இந்தக் குழு 5ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியி—ருக்குமென ஐரோப்பிய ஒன்றியம் தெரி—வித்துள்ளது.

இலங்கையில் நடைபெறவிருக்கும் ஜனாதி—பதித் தேர்தல்களுக்கான ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு பணி பயனுள்ளதாகவும் சாத்தியமானதாகவும் இருக்குமா என்பதை மதிப்பிடுவதற்காகவும் உண்மை தகவல்களை சேகரிப்பதே இந்த ஆய்வுத் திட்டத்தின் நோக்கமென தெரிவிக்கப்படுகிறது.

02 ஆம் பக்க தொடர்ச்சி →

வடிவமைக்கப்பட்டதாகவும்,ஆரம்பத்தில் சமாதானம் சீராகச் சென்றுகொண்டிருந்தாலும் சிறீலங்கா அரசின் கோழைத்தனமான யுத்தநிறுத்த மீறல்களால் படிப்படியாக சமாதானம் சீர்குலையத் தொடங்கியதால், அச்சீர்குலைவுகளே மீண்டும் ஒரு யுத்தத்திற்கு வழிகோலியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையரசாங்கம் ஒரு லட்சத்து நாற்பதினா—யிரத்துக்கும் அதிகமான தமிழ்மக்களைக் கொன்று ஒரு இரத்தம் தோய்ந்த முடிவையே போரின் மூலம் வழங்கியதாகவும், வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த பல விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஈவிரக்கமற்று கொல்லப்பட்டார்கள். ஏனையவர்கள் சித்திரவதைகளுக்கும் பாலியல் வல்லுறவுகளுக்கும் ஆளானார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்மக்கள் அவர்களது சொந்த உரிமைக்காகவும் சொந்த சுதந்திரத்துக்காகவும் போரிட்டார்கள் என்றும், விடுதலைப்புலிகளே தமிழ் மக்களது ஒரேயொரு பிரதிநிதிகளாகவும் இருந்தார்களே தவிர பயங்கரவாதிகளாக அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ்மக்கள் சிங்கள மக்களைப் போலவே சுதந்திரத்துடன் கூடிய அமைதியான வாழ்க்கையை வாழ்வதற்கு நிறையவே உரிமை பெற்றிருக்கிறார்கள் எனவும், அவர்கள் எல்லா வழிகளிலும் சிங்களமக்களுக்கு சமமானவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார். அத்துடன் எந்தவொரு உண்மையான பௌத்தனோ அல்லது , நல்ல சிங்களக்குடிமகனோ இன அழிப்பைச் செய்த கடந்தகால தற்கால இலங்கை அரசுடன் ஒருபோதும் ஒத்துப்போகப் போவதில்லை எனவும் சட்டத்தரணி மெலனி திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

# மூதூர் படுகொலைக் குற்றவாளிகளை தண்டிக்க இலங்கை அரசு தவறிவிட்டது

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் கருத்து

13 வருடங்களிற்கு முன்னர் மூதூரில் அரச சார்பற்ற பணியாளர்களை படுகொலை செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது. இந்த படுகொலை உட்பட முக்கிய படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் இன்னமும் தண்டிக்கப்படாமை சர்வதேச நீதித்துறையின் உதவி இலங்கைக்கு அவசியமாகவுள்ளதை வெளிப்படுத்தியுள்ளது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.



2006 ஆகஸ்ட் நான்காம் திகதி பாரிசை தளமாக கொண்ட அக்சன் பார்ம் அரசசார்பற்ற அமைப்பின் பணியாளர்கள் அரச படை—யினரால் படுகொலை செய்யப்பட்டனர் என குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

யூன் 13 2019 இல் இலங்கையின் சட்டமா அதிபர் அக்சன் பார்ம் படுகொலை உட்பட முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற பாரிய படுகொலைகள் குறித்த விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார் என்பதையும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது. பதின்மூன்று வருடங்கள் ஆகின்ற போதிலும் இலங்கையின் காவல்துறையினரால் 17 மனித உரிமை பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கான காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியவில்லை என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் சட்ட மற்றும் கொள்கை இயக்குநர் ஜேம்ஸ் ரொஸ் தெரிவித்துள்ளார்.

மூதூரினை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்காக இலங்கை படையினருக்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையில்இடம்பெற்ற மோதல்களின் பின்னரே நான்கு பெண்கள் உட்பட 16 தமிழர்களும் ஒரு முஸ்லீம் பிரசையும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவி வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அரச சார்பற்ற பணியாளர்களே கொல்லப்பட்டனர்.

இந்த படுகொலை தொடர்பில் மனித உரிமைகளிற்கான பல்கலைகழக ஆசிரியர் குழு முழுமையான அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. நேரில் பார்த்தவர்கள் மற்றும் ஆயுதங்களை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இலங்கை படையினரே இந்த படுகொலையைச் செய்தனர் என மனித உரிமைகளிற்கான பல்கலைகழக ஆசிரியர் குழு குற்றம்சாட்டியிருந்தது. இலங்கை கடற்படையின் விசேட படைப்பிரிவினரும் இரு காவல்துறை உத்தியோகத்தர்களும் இதற்கு காரணம் என அந்த குழு குற்றம்சாட்டியிருந்தது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. சர்வதேச நீதிபதிகள் மற்றும் சர்வதேச பங்களிப்புடன் கூடிய தீர்ப்பாயம் குறித்து இலங்கை அரசாங்கம் ஐநாவிற்கு உறுதியளித்தது என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மூதூரில் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்களும் ஏனையவர்களின் குடும்பத்தவர்களும் தங்களிற்கு நீதி கிடைக்கக்கூடிய அரசாங்கத்தின் நடவடிக்கைக்காக காத்திருக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளது.

# தமிழினத்தை கருவறுக்கும்




## எமது மக்களின் இயல்பு வாழ்க்கை பறிபோகும் ஆபத்து



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகரசபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய விசேட செவ்வி...

யாழ்.மாநாகரத்தில் அவசரமாக சிமாட் லாம் போல் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைப்பால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய சிந்தனையை நெஞ்சில் நிறுத்தி தமிழர் கல்வி மேம்பாட்டிற்கு அரும்பணியாற்றி தமிழர் தாயகத்தில் மட்டுமன்றி ஒட்டுமொத்த இலங்கை தீவிலும் தனக்கென்று தடம் பதித்திருந்த பொருளியல் ஆசான் மறைந்த வரதாராஜனின் புதல்வரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினருமான வரதராஜன் பார்த்திபன் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அச்செவ்வியின் முதற்பகுதி வருமாறு,

**கேள்வி: 5ஜி எனப்படும் ஐந்தாவது தலைமுறை தொழில்நுட்பம் குறித்த உங்களின் நிலைப்பாட்டினைக் கூறுங்கள்?**

பதில்:— 5ஜி தொழில்நுட்பத்தின் ஊடாக இணையசேவை வழங்கப்படுகின்றபோது அது ஒரு ஜி.பி வரையிலான வேகத்தினையும் அதிகரித்ததாக காணப்படும். இந்த வேகமானது அதியுயர்ந்த அதிர்வெண்களைக் கொண்ட அலைக்கற்றைகளால் வலையமைக்கப்படவுள்ளது. இந்த தொழில் நுட்பமானது யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அறிய முடிகின்றது. ஏன் என்றால் குறித்த கம்பங்களை நிறுகின்ற நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கடந்த மாதம் ஒரு ஆங்கில பத்திரிக்கைக்கு வழங்கிய செவ்வியில் நாங்கள் 5ஜி தொழில்நுட்பத்தினை கொண்டு வருவதற்கான உட்கட்டுமான வசதிகளை நிறுவி வருகின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே குறித்த கம்பங்கள் ஊடாக 5ஜி தொழில்நுட்பம் கொண்டு வரப்பட்வுள்ளது வெளிப்படை

**கேள்வி: நவீன தொழில் நுட்பம் உள்வாங்கப்படுவதில் என்ன தவறிருக்கின்றது?**

பதில்:— உலகின் ஒரு வெற்றிகரமான நாட்டை மக்களுடன் ஆலோசிக்காமல் உருவாக்க முடியாது என்று சிங்கப்பூர் நாட்டைக் கட்டியெழுப்பிய அதன் முன்னாள் பிரதமர் அமரர் லிகுவான் யூ கூறியிருந்தார். அப்படி—யிருக்க, பல நாடுகளில் பரிசோதனை அளவில் இருக்கின்ற இத்தொழில்நுட்பத்தின் தேவை தற்போதைய நிலையில் யாழ்.மாநகர சபைக்கு தேவையானதா? என்ற கேள்வி எழுகின்றது.

உலக நாடுகள் தொழிநுட்பதுறையில் முன்னேறும் போது அதற்கு ஈடு இணையாக எமது மாநகரமும் முன்னேற வேண்டும் என்பதில் எமக்கு மாற்று கருத்து கிடையாது. ஆனால் யாழ்.மாநகரத்தின் அடிப்படைக் கட்டுமானங்கள் கூட பூர்த்தி செய்யாத நிலையில் சிமாட்

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகரசபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் பேட்டி**

சிற்றிகளுக்கே உரித்தான் இவ்வாறான தொழில் நுட்பம் தற்போது எமக்கு தேவை தானா? அத்துடன் இத்தொழில்நுட்பத்தின் மூலம் வெளிப்படும் கதிர் வீச்சினை அளப்பதற்குரிய எந்த பொறிமுறையும் இல்லாத நிலையில் அது பற்றிய எந்த விபரங்களும் தரப்படாத இடத்தில் இந்த 5ஜினை யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அறிமுகப்படுத்துவதானது மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களினதும் ஆரோக்கியத்திற்கும் பாரிய பரிசோதனையாக அமைக்கின்றது.

**கேள்வி: உயிரினங்களின் ஆரோக்கியம் கேள்விக்குறியாகும் என்று எந்த அடிப்படையில் கூறுகின்றீர்கள்?**

பதில்:— ஜெருசலமின் ஹீப்ரூ பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த வைத்தியர் யேல் ஸ்டீன் பெடரல் கம்னியூகேசன்ஸ் கமிசனுக்கு கடிதமொன்றை அண்மையில் எழுதியிருந்தார். 5ஜி எம்.எம்.வி பற்றிய முக்கிய விடயங்களை குறிப்பிட்டு அதுகுறித்த கவலைகளையும்



அதனால் மனித சருமம் எவ்வாறு பாதிக்கும் என்பதையும் கோடிட்டுக் காட்டியிருந்தார். மனித சருமமானது நுண்ணலைக் கதிர்வீச்சில் 90சதவீதத்திற்கும் அதிகமானவற்றை உறிஞ்சும் திறனைக் கொண்டுள்ளது. இதனால் தலை—யிலிருந்து கால்விரல்கள் வரையில் முக்கியமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக குழந்தைகள், பெரியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் பாரபட்சமின்றி பாதிப்புக்களை ஏற்படுத்தவல்ல காரணிகள் இருக்கின்றன. அதுமட்டுமன்றி மனித உடலில் உள்ள வலி ஏற்பிகளை உடலினுள்ளேயே வெடிக்கச் செய்யலாம். கண்கள் பாதிக்கப்படுவதோடு உயிரணு வளர்ச்சியை கணிசமாக கட்டுப்படுத்துவதோடு நோயெதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கும் மண்டலத்தினையும் பூரணமாக சிதைக்கும் வல்லமையைக் கொண்டிருக்கின்றது.

ஆக 5ஜி தொழில்நுட்பமானது உள்வாங்கப்படுவதால் ஆரோக்கியத்தினை பாதிப்பதோடு தமிழினத்தினை ஒட்டுமொத்தமாக கருவறுக்கும் செயற்பாடொன்றுக்கே வழிவகுக்கும். இதனைவிடவும் இதற்காக அமைக்கப்படும் கோபுரங்கள் சுற்றுச்சூழலை பாதிப்பதுடன் பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாகவும் இல்லை.

**கேள்வி: யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் 18 சிமாட் லாம் போல்கள் தான் நிறுவப்படவுள்ளதாக கூறப்படுகின்றதே?**

பதில்:— சிமாட் லாம் போல் என்ற பெயரில் தான் இவை யாழ்.மாநாகரச சபை எல்லைக்குள் அறிமுகமாகின்றன. 18 சிமாட் லாம் போல்களை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த சிமாட் லாம் தூண்கள் நாட்டப்பட்டு அதில் அன்டனாக்கள் சிறிதான அளவில் பொருத்தப்படும். அவை



அளவில் சிறிதாக காணப்பட்டாலும், அவற்றின் அதிர்வெண் மிகவும் அதிகமானது. இத்தகைய அதியுயர்ந்த அதிர்வெண் அலைவரிசைகள் எமது மக்களின் உடலுக்குள் புகுந்து கலங்களைச் செயலிழக்கச் செய்துவிடும். இதனால் நோய் எதிர்ப்பு கலங்கள் இலகுவில் செயலிழக்கச் செய்யப்பட்டு புற்றுநோய், கருச்சிதைவு என்பன அதிகம் ஏற்பட்டுவிடுகின்றன. பூமிக்கு வரும் கதிர்வீச்சினை தடுப்பதற்காகவே ஓசோன் படலம் இயற்கையாகவே காணப்படுகின்றது. அவ்வாறிருக்க, இத்தகைய அன்டனாக்கள் மூலம் வெளியாகும் கதிர்வீச்சினை தடுப்பதற்கு எமது மக்களின் உடல்களைச் சுற்றி எவ்வகையான பாதுகாப்பு உள்ளது என்பதை ஒருகணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆகவே இயற்கையாகவோ செயற்கையாகவோ0 எம் உடல்களை கதிர்வீச்சிலிருந்து பாதுகாக்க எவ்விதமான ஏற்பாடுகளும் இல்லாதவிடத்து எம்மை நாமே தான் காப்பாற்ற வேண்டியுள்ளது. இதனைவிடவும் இந்த சிமாட் லாம் போல்கள் அனைத்திலும் கமராக்கள் பூட்டப்படுகின்றன.

சிமாட் லாம் போல்களில் கமராக்கள் அத்தியாவசியமான விடயம் என்பது ஒருவாதமாக இருந்தாலும், அவற்றுக்கான தூண்கள் சுமார் 20மீற்றர் உயரத்தில் சன நெருக்கடி மற்றும் குடியிருப்புக்கள் நிறைந்த இடங்களில் அமைக்கப்படுவதால் இயல்பு வாழ்க்கை பாதிப்படையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி அடுத்தவாரம்

# ரணில் வகுத்த புதிய வியூகம் தகர்த்தெறிந்த சஜித் பிரேமதாச

**பூமிகன்**



ஐதேக அமைக்கும் மெகா கூட்டணியான ஜனநாயக தேசிய முன்னணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நாளை திங்கட்கிழமை கைச்சாத்திடப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும். ரணில் — சஜித் மோதல் இதில் புதிய நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது. நெருக்கடி மோசமடைந்து — தான் களமிறங்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டால், கரு ஜயசூரியவை களமிறக்கிவிட்டு, தான் பிரதமர் வேட்பாளராக களமிறங்கும் திட்டத்துடன் ரணில் செயற்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அரசியல் களத்தில் நிமிடத்துக்கு நிமிடம் மாற்றங்கள் நிகழ்கின்றன. அடுத்ததாக என்ன நடக்கும் எனச் சொல்லமுடியாத நிலை உருவாகியிருக்கின்றது. ரணில் — சஜித் மோதல் குறித்து கடந்த வாரமும் இந்தப் பகுதியில் பார்த்தோம். இரு தரப்பினருமே விட்டுக்கொடுப்பதில்லை என்ற நிலை—யில்தான் இருக்கின்றார்கள். கட்சியின் பாராளுமன்றக்குழு கடந்த வாரம் கூடியபோதும் இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டிருந்தது. கட்சியின் செயற்குழு கடந்த திங்கட்கிழமை கூடியபோதும் இதே பிரச்சினைதான் அங்கு குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

கட்சிக்குள் சஜித்துக்கான ஆதரவு அதிகரித்திருப்பதை அவதானித்த ரணில், நிலைமைகளைத் தனக்குச் சாதகமாகத் திருப்புவதற்கு மற்றொரு உபாயத்தைக் கையாண்டார். சனாதிபதி வேட்பாளர் தெரிவை ஐ.தே.க. மேற்கொள்ளாது, அதன் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து உருவாக்கும் ஜனநாயக தேசிய முன்னணி மூலம் அந்தத் தெரிவை மேற்கொள்ளலாம் என்பதுதான் அவரது திட்டம். ஐ.தே.மு.வில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உருமய போன்ற கட்சிகளும் இணைந்துகொள்ளும். அவை தன்னை ஆதரிக்கும் என்ற நம்பிக்கையிலேயே இந்த உபாயத்தை கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ரணில் முன்வைத்தார்.

புதிய கூட்டணியில் தனக்கு இசைவான நிலையை ஏற்படுத்தும் வகையில் அதன் யாப்பு விதிகளையும் தயாரிக்க ரணில் முயன்றதாகச் சொல்லப்படுகின்றது. இப்போது கட்சியில் புயலை ஏற்படுத்தியிருப்பது அதுதான். புதிய கூட்டணியை ஏற்படுத்துவதற்கு கட்சியின் செயற்குழு அங்கீகாரமளித்திருக்கின்றது. ஆனால், அதற்காக ரணிலால் தயாரிக்கப்பட்டிருக்கும் யாப்பு விதிகளைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாது என சஜித் தரப்பு திட்டவட்டமாக மறுத்துவிட்டது.

ரணிலின் திட்டத்தின்படி பத்து உறுப்பினர்களைக் கொண்ட தலைமைத்துவச் சபை ஒன்று அமைக்கப்படும். கூட்டணியில் இணையும் கட்சிகளின் தலைவர்கள் அதில் இடம்பெறுவார்கள். ஐ.தே.க.வில் இல்லையென்றாலும் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள ராஜிதவும் தலைமைத்துவக் குழுவில் இடம்பெறுவார். கூட்டணியின் செயலாளர் பதவியை தன்னுடைய விசுவாசியான ராஜிதவுக்குக் கொடுப்பதுதான் ரணிலின் திட்டம். கூட்டணியின் முடிவுகளை எடுக்கும் அதிகாரம் இந்த தலைமைத்துவக் குழுவுக்கே இருக்கும். சஜித், கரு யாரும் இதில் இருக்கமாட்டார்கள். தனக்கு சாதகமான முடிவுகளை எடுக்கும் வகையில் இந்தத் தலைமைத்துவக் குழுவை அமைப்பதற்கு ரணில் முற்பட்டிருக்கும் நிலையிலேயே சஜித் தரப்பு கொதித்தெழுந்திருக்கின்றது.

ரணிலின் இந்த முயற்சிக்கு சஜித் தரப்பு ஒரேயடியாக ஆப்பு வைத்துவிட்டது. "சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளுடன் இணைந்து 'கூட்டணி' ஒன்றை அமைப்பதற்கு நாம் ஆதரவளிப்போம். ஆனால், சனாதிபதி வேட்பாளர் தெரிவை அதற்கு முன்னர் நாம் முன்னதாக மேற்கொள்வோம்" என சஜித் தரப்பு தெரிவித்தது. அத்துடன், கூட்டணியின் செயலாளர் பதவியும் ஐ.தே.கவின் வசமே இருக்க வேண்டும் என்பதையும் சஜித் தரப்பு உறுதியாக இருந்தது. ரணில் தன்னைப் பலப்படுத்துவதற்கான ஒரு யுக்தியாகவே இதனைச் செய்வதாகவும் அவர்கள் கருதினார்கள். இதனால்தான் செயலாளர் பதவியைத் தனக்குத் தரவேண்டும் என சஜித் பகிரங்கமாகவே கோரினார்.

இது குறித்து மனோ கணேசனுடன் பேசிய போது, சஜித் இவ்வாறு கூறியிருக்கின்றார். "நான் ஒருபோதும் கூட்டணிக்கு எதிரானவன் அல்ல. அப்படி ஒரு தவறான கருத்தை சிலர் திட்டமிட்டு பரப்புகிறார்கள். உண்மையில் கூட்டணி இல்லாமல் ஐக்கிய தேசிய கட்சியால் தனித்து வெல்ல முடியாது என எனக்கு மிக நன்றாக தெரியும். ஜனநாயக தேசிய கூட்டணியின் உத்தேச யாப்பின் சில சரத்துகளை திருத்த வேண்டுமெனவே நான் கூறுகிறேன். உண்மையில் ஐதேகவும், உங்களது தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உருமய ஆகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உருவாக்கும் ஜனநாயக தேசிய கூட்டணியின் பொது செயலாளராக பணியாற்றக்கூட நான் தயாராக இருக்கிறேன்."

கூட்டணியின் சக்திவாய்ந்த பொதுச் செயலாளர் பதவியைத் தன்னிடம் வைத்திருக்கவேண்டும் என்பதில் சஜித் அக்கறையாக இருப்பதை இது உணர்த்துகின்றது. கூட்டணியில் இணையும் கட்சிகளில் பெரும்பாலானவை ரணிலை ஆதரிக்கலாம் என்ற நிலையிலேயே, சனாதிபதி வேட்பாளரை முதலில் தெரிவு செய்வோம். கூட்டணி உடன்படிக்கையில் பின்னர் கையொப்பமிடுவோம் என சஜித் அணி பிடிவாதமாக இருந்தது. கட்சிக்குள் சஜித்துக்கு அதிகளவு ஆதரவு இருப்பதும் தெரிந்தது. வேட்பாளரைத் தெரிவதற்கு செயற்குழுவில் வாக்கெடுப்பு எனப் போனால், தனக்கு ஆபத்தாகிவிடலாம் என ரணில் அஞ்சினார்.

இந்தப் பின்னணியிலேயே வியாழக்கிழமை இரவு கரு ஜயசூரியவை அலரி மாளிகைக்கு அழைத்த ரணில் அவருடன் நீண்ட நேரம் தனிமையில் உரையாடியதாகச் சொல்லப்படுகின்றது. அதன்போதே கருவை சனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவதற்கான தனது விருப்பத்தை ரணில் வெளியிட்டதாகச் சொல்லப்படுகின்றது. நிறைவேற்று அதிகார சனாதிபதிப் பதவியை இல்லாதொழிப்பது என்பது அரசியலில் நீண்டகாலமாகச் சொல்லப்படும் வாக்குறுதி. அதனைச் செய்வதன் மூலம், அதிகாரமிக்க பிரதமராக தான் தொடர்ந்தும் இருப்பதுதான் ரணிலின் திட்டம். சஜித் தரப்பு கருவை ஏற்றுக்கொள்வதற்கும்



தயாராகவில்லை. அத்துடன், கூட்டணிக்கான யாப்பைத் திருத்த வேண்டும் என்பதிலும் அவர்கள் பிடிவாதமாக இருக்கின்றார்கள். இரு தரப்பினரும் வாழ்வா? சாவா? என்ற வகையில் மோதலில் குதித்திருக்கும் நிலையில், திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு பின்போடப்படும் நிலை தோன்றியுள்ளது. இந்த நெருக்கடி ஐ.தே.கவில் பாரிய பிளவு ஒன்றுக்கு வழிவகுக்கும் ஆபத்து உருவாகியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

# சத்தமின்றி நடக்கும் இன அழிப்பு யுத்தம்

**தீபச்செல்வன்**

அண்மையில் கிளிநொச்சியில் நடந்த இரட்டைக் கொலை கிளிநொச்சியை மாத்திரமல்ல, முழு ஈழத்தீவையுமே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. போருக்குப் பிறகு, கிளிநொச்சி குறித்தும் வடக்கு கிழக்கு குறித்தும் அவ்வப்போது இத்தகைய செய்திகள் வெளியாகின்றன. 2009இற்கு முன்னரான காலத்தில், அதாவது விடுதலைப் புலிகளின் காலத்தில் வீரத்தையும் சாதனைகளையும் எடுத்தியம்பிய இம் மண்ணில் இன்று இத்தகைய செய்திகள் வெளி வருகின்றமை எதேச்சையானதா?



2009 உடன் போர் முடிந்துவிட்டது என்றே சொல்லப்படுகின்றது. இப்போதுதான் வடக்கு கிழக்கில் அமைதி நிலவுகின்றது என்று ஆளும் சிங்கள அரசுகள் கூறி வருகின்றன. இப்போதுதான் வடக்கு கிழக்கில் போக்குவரத்துக்கள் இயல்பாக நடப்பதாகவும் சொல்லுகின்றது. ஆனால் வடக்கு கிழக்கில் இயல்பாக சட்டவிரோத போதைப் பொருட்களும் வந்து சேருகின்றது என்பதை இலங்கை அதிபர்கள் சொல்லுவதில்லை. போருக்குப் பிறகும் வடக்கு கிழக்கில் உயிரிழப்புக்கள் ஏதோ ஒரு வகையில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு இளைஞனை சிங்கள காவல்துறையினர் சுட்டுப் படுகொலை செய்திருந்தனர். ஆவாக் குழுவை சேர்ந்த இளைஞரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தரப்பால் சொல்லப்பட்டது. ஆனால், முகநூலில் அந்த இளைஞனுக்காக கண்ணீர் அஞ்சலிகளை தெரிவிப்பவர்களைப் பார்த்தால் அந்த இளைஞன் அத்தகையதொரு குழுவில் இருந்திருப்பாரா? குற்றச் செயல்களை செய்திருப்பாரா என்று சந்தேகம் ஏற்படுகின்றது. சில வருடங்களின் முன்னர் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரையும் காவல்துறையினர் இவ்வாறு படுகொலை செய்திருந்தனர்.

ஆவாக் குழு என்பது ஆமிக்குழுவே. அது அரசியல் காரணங்களுக்காக சிங்கள அரசால், குறிப்பாக கோத்தபாய ராஜபக்சவினால் உருவாக்கப்பட்ட குழு. வடக்கு கிழக்கில் வன்முறை நிலவுகின்றது. வன்முறை இளைஞர் குழுக்கள் உள்ளன. எனவே இராணுவத்தை வடக்கு கிழக்கில் வைத்திருக்க வேண்டும் என்று சொல்லுவதற்காக சிங்கள அரசும் இராணுவமும் உருவாக்கியதே ஆவாக் குழு. அதற்கு ஊடகங்களும் கவனத்தைப் பெற்றுக் கொடுக்கின்றன. உலகின் மிகச் சிறந்த விடுதலை இயக்கத்தை, வீரமான ஒரு அமைப்பை அழித்த சிங்கள அரசுக்கு ஏன் ஆவாக் குழுவை அடக்க முடியவில்லை? விடுதலைப் புலிகள் மீள உயிர்க்கிறார்கள் என்று கதைவிட்டு, ஈழத் தமிழ் இளைஞர்களை அழிக்கிற, ஒடுக்கிற அரசுக்கு இதனை ஏன் செய்ய முடியவில்லை என்ற கேள்வி எழுகிறதல்லவா? கிளிநொச்சியில் இரட்டைக் கொலை செய்தவர், கஞ்சா போதைப் பொருளை உட்கொண்டிருந்தார் என்று காவல்துறை தரப்பில் கூறப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் இன்றைக்கு கஞ்சாவும் கத்தியும் வருவதற்கும் அந்தக் கலாசாரம் மேலோங்குவதற்கும் யார் காரணம்? வடக்கு, குறிப்பாக யாழ்ப்பாணம் இன்று கஞ்சா கைமாற்றப்படும் பகுதியாகியுள்ளது. யாழ்ப்பாணத்தின் பேருந்துகளிலிருந்து கஞ்சா கொண்டு செல்லப்படுகின்றது. இதில் ஆளும் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்பவர்களுக்கும் வருமானம் கிடைப்பதாக சொல்லப்படுகின்றது.

ஈழத்தைப் பொறுத்த வரையில், இன்றைக்கு சட்டவிரோத போதைப் பொருட்கள் மையம் கொள்ளுவதற்கு சிங்கள இராணுவமும் காவல்துறையுமே காரணம். கிளிநொச்சியில் ஒருமுறை சிறுவன் ஒருவன் போதைப் பொருளுடன் மக்களால் பிடிக்கப்பட்டான். போரில் தாய் தந்தையை இழந்த அவன், இராணுவ முகாம் ஒன்றுக்கு போதைப் பொருளை கடத்திச் செல்லுகையில், வீடு ஒன்றுக்குள் நுழைந்து திருடவும் முற்படுகையில் மக்களால் பிடிக்கப்பட்டான். போரில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களின் பாடசாலைக் கல்வி குழப்பட்டு, அவர்கள் போதைப் பொருள் சுமக்கும் சிறுவர் தொழிலாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், போரில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்கள், கல்வி கற்கவும் தமது ஆளுமையை வளர்க்கவும் சிறுவர் இல்லங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை, குருகுலம் என சிறுவர் இல்லங்கள் பிள்ளைகளை வளர்த்தெடுத்தன. காந்தரூபன் அறிவுச்சோலை முதலாவது ஆண்டு நிறைவில் கலந்து கொண்ட, தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறுகையில், போரினால் பாதிக்கப்பட்ட ஈழ மண்ணின் செடிகள், கல்வி, ஆளுமை, அறநெறி கொண்ட முழு மனிதர்களாக வளர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அறிவுச்சோலையை உருவாக்கியதாக கூறுகின்றார். சிறுவர்களை பாதுகாத்து, அவர்களை நெறிமுறை பிறழாமல் ஈழ மண்ணின் ஆளுமைகளாக, அறநெறி கொண்ட முழு மனிதர்களாக உருவாக்கிய அத்தகைய கட்டமைப்புக்களை உருவாக்கிய விடுதலைப் புலிப் போராளிகளை பயங்கரவாதிகள் என்று கூறி, சர்வதேச ஆதரவுடன் அழித்தொழித்த சிங்கள அரசு, இன்று ஈழ மண்ணில் தாம் எத்தகைய பயங்கரவாதிகள் என்பதை வெளிப்படுத்துகின்றனர். வடக்கு கிழக்கில் உள்ள நீதிமன்றங்களில் சிறுவர்கள் குற்றவாளிகளாக அதிகரிக்கும் ஒரு சூழலைதான் சிங்கள அரசு உருவாக்கியுள்ளது. இதனைத்தான் போருக்குப் பிந்தைய அழகிய காலம் என்றும் சிங்கள அரசு சொல்கின்றது.

இந்த விசித்திரத்தில்தான் இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன, போதைப் பொருளுக்கு எதிராக மரண தண்டனையை அமுல்படுத்த முனைகின்றார். குளவிகளைக் கொல்லவும், யானைகளை கொல்லவும், நாய்களைக் கொல்லவும் தடையுள்ள நாட்டில், ஈழத் தமிழர்கள் மாத்திரம் கொல்லப்பட்டலாம். போரின் இறுதியில் சரணடைந்த ஆயிரக் கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என்று சிங்கள அரசு வாய் மூடி இருக்கிறது. அதிபர் சிறிசேன வாய் திறக்கிறார் இல்லை. லட்சம் பேரை அழித்து, பல ஆயிரம் பேரை காணாமல் ஆக்கிய அரசில் அதிபராகவும் பிரதமராகவும் இருப்பவர்களுக்கு தானே முதலில் மரண தண்டனை விதிக்க வேண்டும்.அண்மையில் சிறிசேனவின் மரண தண்டனைப் பட்டியல் வெளியிடப்பட்டது. அந்தப் பட்டியலில் 18 மரண தண்டனை கைதிகளின் பெயர் விபரங்களை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. அதில் பதினாறு பேர் தமிழ் பேசுபவர்கள். நான்கு பேர் சிங்களவர்கள். ஆறு தமிழர்களும் ஆறு முஸ்லீம்களுமாய் 16 தமிழ்பேசுவோர். தமிழர்கள் சிறுபான்மையராக உள்ள நாட்டில் சிறிசேனவின் மரண தண்டனைப் பட்டியலில் மாத்திரம் தமிழர்களுக்கு அதிக இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கல்வியில், அரசியலில் மிகவும் குறைந்த இடமே உள்ள ஈழத் தமிழர்களுக்கு மரண தண்டனைப் பட்டியலில் மாத்திரமே அதிக இடம். இதுதான் சிங்களம்.

வடக்கு கிழக்கில் இராணுவத்தை நிலைநிறுத்தி, அவர்கள் சிறுவர்களை போதைப் பொருளுக்கு அடிமையாக்கும் வேலைகளை செய்துவிட்டு, அதே இராணுவம் போதை இறங்க விழிகளுடன் வந்து பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் குறித்து வகுப்பு எடுக்கின்றனர். எமது தலைமைகளும் இது தொடர்பில் மௌனம் காக்கின்றன. அரசியல் தலைமை, நிர்வாகம், சமூகம் என அனைத்து மட்டத்திலும் விழிப்பும் அர்த்தபூர்வமான செயற்பாடுகளுமே எமக்கு அவசியம் ஆகும். யுத்தம் என்பது சத்தத்துடன் மாத்திரம் நிகழ்வதல்ல, கத்தியின்றி, இரத்த மின்றியும் நிகழும் என்பதற்கு ஈழம்தான் எடுத்துக்காட்டு. ஒரு புறம் போதைப் பொருளுக்கு எதிராக பேசிக் கொண்டு, மனித விரோத செயல்களை செய்துவிட்டு, மரண தண்டனை பற்றிப் பேசிக் கொண்டு, அதே போதைப் பொருளால் வடக்கு கிழக்கில் இன அழிப்பு யுத்தம் செய்கின்றது சிங்கள அரசு. போராளிகளின் ஈகத்தால் பெருமை பெற்ற மண்ணின் வரலாற்றை மாற்றத் துடிக்கின்ற வரலாற்று ரீதியான, இன ரீதியான அழிப்புக்கான நுண் செயற்பாடுகளே இவை.



# எழுக தமிழ்-2019

“நமக்கிடையே இருக்கின்ற அரசியல் பேதங்களும் ஒற்றுமையீனங்களும் கருத்து மோதல்களும் எங்கள் இனத்திற்கு ஆபத்தாக முடியுமென்பதால், மீண்டும் மீண்டும் நாம் கேட்பது அரசியல் பேதங்களை மறந்து தமிழ் அரசியல் கட்சிகள் அத்தனையும் ஒன்றுபட்டு, மக்கள் இயக்கமாகிய தமிழ் மக்கள் பேரவை முன்னெடுக்கும் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் பங்கேற்க வேண்டும் என்பதாகும். இந்த ஒற்றுமை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் பேரணியில் பேரலையாக ஒன்றுபட வைக்கும் என்பது எம் அசைக்க முடியாத நம்பிக்கை.........

அன்பார்ந்த தமிழ்மக்களே! பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு தமிழர் தாயகத்திற்குள் ஊடுருவி விட்டது. ஏற்கனவே படைத்தரப்பால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களை விடுவிக்க மனமின்றி காலம் கடத்தப்படுகிறது. இந்த வேளையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு பேரணியாக எழுச்சிபெற்று எங்கள் அவலத்தை உலகறியச் செய்வோம். இது தமிழினம் வாழ்வதற்கான எழுகை. உங்கள் ஒவ்வொருவரின் வரவும் நிச்சயம் சர்வதேச சமூகத்திடம் மிகப்பெரும் கவனயீர்ப்பை ஏற்படுத்தும் என்பதால் செப்டெம்பர் 7 ஆம் திகதி பேரலையாய் எழுந்து பேரணியில் கலந்து கொள்ளுங்கள் என தமிழ் மக்கள் பேரவை உங்களை அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றது......”

## நிலாந்தன்

இது தமிழ் மக்கள் பேரவையின் அறிவிப்பு. கன்னியா பிள்ளையார் கோவில் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் கொதிப்பையும் கொந்தளிப்பையும் ஒரு பேரெழுச்சியாகத் திரட்டி எடுப்பதற்கு தமிழ் மக்கள் பேரவை முன்வந்திருக்கிறது. பேரவை மீதான விமர்சனங்கள் அதிகரித்து வரும் ஒரு காலச்சூழலில் பேரவைக்குள் காணப்பட்ட கட்சிகள் தங்களுக்கிடையே மோதிக்கொள்ளும் ஓர் அரசியல் சூழலில் பேரவையின் மேற்படி அறிவிப்பு வந்திருக்கிறது.

கூரான வார்த்தைகளை சொன்னால் பேரவை காலாவதியாகி விட்டதா என்ற கேள்வி பரவலாகக் கேட்கப்படும் ஒரு காலச்சூழலில் பேரவை மற்றொரு எழுக தமிழுக்கான அறிவிப்பை விடுத்திருக்கிறது.

முதலில் ஒன்றை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரு மக்கள் பேரெழுச்சி தேவை. 2009—க்கு பின் யுத்தத்தை வேறு வழிகளில் தொடரும் அரசின் உபகரணங்களான திணைக்களங்களுக்கு எதிராக ஒரு பேரெழுச்சியை காட்ட வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு உண்டு. எனவே பேரவையின் மேற்படி அறிவிப்பை வரவேற்க வேண்டும். அதேசமயம் பேரவையின் இயலாமைகள் தொடர்ப்பிலும் விமர்சிக்க வேண்டும். இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில் பேரவையை எந்த நோக்கு நிலையில் இருந்து விமர்சிக்கிறோம் என்பதுதான். தமிழ் மக்களின் அடுத்த கட்ட அரசியலை





முன்னகர்த்தும் ஓர் இடை ஊடாட்டத் தளம் என்ற அடிப்படையில் பேரவையை விமர்சிப்பது வேறு. கூட்டமைப்பின் நோக்கு நிலையிலிருந்து அல்லது சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் கையாளாக இருந்து பேரவையை விமர்சிப்பது வேறு.

ஏனெனில் பேரவை ஒரு காலகட்டத்தின் தேவை. அது அக்காலகட்டத்தின் தேவையை ஓரளவிற்கு நிறைவேற்றியது. ஆனால் ஒரு கட்டத்துக்கு மேல் அதனால் பாய முடியவில்லை. ஏனெனில் அதன் பிறப்பிலேயே அதற்குரிய வரையறைகள் காணப்பட்டன. அது முதலாவதாக ஒரு விக்னேஸ்வரன் மைய அமைப்பு. இரண்டாவதாக ஒரு பிரமுகர் மைய அமைப்பு. மூன்றாவதாக கூட்டமைப்புக்கு எதிராகக் காணப்பட்ட உணர்வுகளை அபிப்பிராயங்களை திரட்டி எடுப்பதற்குரிய ஓர் இடை ஊடாட்ட தளம். நிச்சயமாக அதுவே இறுதித் தரிப்பிடம் அல்ல.

பேரவை வெற்றிடத்திலிருந்து தொடங்கவில்லை. அது ஏற்கனவே அனைத்துலகக் கவனிப்பை பெற்றிருந்த தமிழ் சிவில் சமூகம் அமையத்தின் ஒரு கிளைத் தொடர்ச்சிதான் 2009 மேக்குப் பின் தமிழ் பகுதிகளில் நிலவிய யுத்த வெற்றிவாதத்தின் கீழான அச்சச்சூழலில் தமிழ் சிவில் சமூக அமையமானது குரலற்ற மக்களின் குரலாக ஒலித்தது. அது அந்தக் காலத்தின் கட்டாயத் தேவையாக இருந்தது. அதில் சமூகத்தின் பிரமுகர்களாக காணப்பட்ட பலரும் மதகுருக்களும் செயற்பாட்டாளர்களும் இணைந்து இயங்கினார்கள். அதுவும் அதிகபட்சம் ஒரு பிரமுகர் அமைப்புத்தான். ஆனால் அது தவிர்க்க முடியாததும் கூட. ஏனெனில் 2009—க்கு பின் யுத்த வெற்றிவாதத்தின் கீழ் அரசியல் செய்வது என்பது ஆபத்தானதாக இருந்தது. முன்னைய காலங்களில் ரிஸ்க் எடுத்த பலரும் யுத்த வெற்றிவாதத்தின் கீழ் செயற்பட முடியாத ஒரு நிலைமை காணப்பட்டது. இப்படிப்பட்ட ஓர் அரசியல் சூழலில் சமூகத்தின் பிரமுகர்களாக காணப்பட்டவர்களே அரசியல் பேசக் கூடியதாக இருந்தது. ஏனெனில் அவர்களுடைய சமூக அந்தஸ்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கவசமாக காணப்பட்டது.



ஆனால் 2015ந்தில் ஆட்சி மாற்றத்தோடு சிவில் சனநாயக வெளி ஒப்பீட்டளவில் அதிகரித்தது. இந்த வெளிக்குள் செயற்படுவதற்கு தமிழ் சிவில் சமூக அமையத்தை விட அரசியல் அடர்த்தி கூடிய ஒரு மக்கள் இயக்கம் தேவைப்பட்டது. அத் தேவையின் அடிப்படையில் உருவாகியதே பேரவை. அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஓர் அரங்கச் செயற்பாட்டாளர் என்னிடம் கேட்டார் “ஒரு பொருத்தமான மக்கள் அமைப்பு தோன்ற வேண்டிய இடத்தில் இப்படி ஒரு பிரமுகர் அமைப்பு தோன்றி—யிருக்கிறது. இது இக்காலகட்டத்துக்கு உரிய பொருத்தமான அமைப்பொன்று தோன்றுவதை பின் தள்ளப் போகிறதா? ”என்று.

தமிழ் சிவில் சமூக அமையத்துக்குள் காணப்பட்ட அல்லது அதற்கு ஆதரவான ஒரு பகுதி செயற்பாட்டாளர்களும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இணைந்து விக்னேஸ்வரனை மையமாகக் கொண்டு பேரவையை கட்டியெழுப்பினார்கள்.

விக்னேஸ்வரனை மையமாகக் கொண்ட ஓர் அமைப்பாக காணப்பட்டமைதான் தொடக்கத்தில் அதன் பலமாக காணப்பட்டது. ஏனெனில் அப்பொழுது விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தார் அவரை அரசியலுக்குக் கொண்டுவந்த தலைமைக்கு எதிராக ஒரு புதிய தலைமையாக அவர் மேல் எழுவதற்குரிய இடை ஊடாட்டத் தளமாக பேரவை இயங்கியது. ஆனால் அது விக்னேஸ்வரனைச் சுற்றி கட்டப்பட்டிருந்தமைதான் அதன் பலவீனமாகவும் காணப்பட்டது. விக்னேஸ்வரன் பேரவைக்குள் காணப்பட்ட இரண்டு பெரிய கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு மாற்று அணிக்கு தலைமை தாங்க பின்னடித்தார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அவர் தலைமையில் பேரவையானது தன்னுள் அங்கங்களாக காணப்பட்ட இரண்டு கட்சிகளையும் ஒருங்கிணைத்து ஒரு பொது

ஐக்கிய முன்னணியை உருவாக்க தவறியது. விக்னேஸ்வரன் அவருடைய பதவிக்காலம் முடியும் வரையிலும் அப்படி ஒரு தலைமையை வழங்க தயாராக காணப்படவில்லை. இதுதான் பேரவையைப் பெருமளவுக்கு முடக்கியது. இதுதான் இப்பொழுது மாற்று அணிக்குள் ஏற்பட்டிருக்கும் மோதல்களுக்கும் காரணம். பொருத்தமான கால கட்டத்தில் சரியான முடிவை எடுத்து தலைமை தாங்கத் தவறியது.

இப்படிப் பார்த்தால் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலோடு பேரவையானது பெருமளவிற்கு காலாவதியாகத் தொடங்கிவிட்டது. அதன்பின் அதற்குள் அங்கமாக காணப்பட்ட இரண்டு கட்சிகளும் ஒன்று மற்றதை எதிர்த்து விமர்சிக்கத் தொடங்கின. இது அதன் ஆகப்பிந்திய வடிவமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது விக்னேஸ்வரனுக்கும் பேரவைக்கும் எதிராக கருத்துக்களை முன் வைக்கும் ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது. தன்னுள் அங்கமாக காணப்பட்ட கட்சித் தலைவர்களுக்கிடையே ஒருங்கிணைப்பையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த பேரவையால் முடியவில்லை.



அதிலும் குறிப்பாக விக்னேஸ்வரன் தனது கட்சியை அறிவித்த பொழுது அது தொடர்பில் பேரவைக்கு முன்கூட்டியே அறிவித்திருக்கவில்லை என்ற விமர்சனமும் எழுந்தது. இதுவும் பேரவையின் செயற்பாடுகளை தேங்க வைத்தது. இவ்வாறு கடந்த பல மாதங்களாகத் தேங்கிக் கிடந்த பேரவை கடந்த வாரம் மற்றொரு எழுக தமிழுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

விக்னேஸ்வரனின் கட்சி தொடங்கப்பட்டபின் பேரவை பெரிய அளவில் செயற்படவில்லை. வழமைபோல அதன் கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றில் விக்னேஸ்வரன் கலந்து கொண்டு தனது தலைமையை தான் கைவிடத் தயார் என்றும் அறிவித்தார். எனினும் பேரவைக்குள் ஒரு பகுதியினர் விக்னேஸ்வரனை பேரவைக்கு வெளியே விடத் தயாரில்லை. அதேசமயம் அவருடைய கட்சியை வெளிப்படையாக ஆதரித்து அதைக் கட்டியெழுப்பவும் தயாரில்லை. இவ்வாறாக விக்னேஸ்வரனுக்கும் தேர்தலில் ஈடுபடாத பொதுமக்கள் அமைப்பு என்ற கனவுக்கும் இடையே பேரவை தொடர்ந்தும் ஈருடக அமைப்பாகவே காணப்படுகிறது. இக்கால கட்டத்தில் அது பெரிய அளவில் பெருந்திரள் மக்கள் அரசியலை முன்னெடுக்கவில்லை.

அந்த அமைப்புக்குள் பிந்தி இணைக்கப்பட்ட சில செயற்பாட்டாளர்கள் பேரவையை மறுபடியும் முடுக்கிவிட முயற்சித்தார்கள். பேரவைக்கென்று ஒரு யாப்பைத் தயாரிக்கும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. எனினும் பேரவைக்குள் ஏற்கனவே ஸ்தாபித்தமாகக் காணப்பட்ட சிலர் பேரவைக்குள் பிந்தி இணைந்தவர்கள் மேலெழுவதை விரும்பவில்லை என்று தெரிகிறது. இவ்வாறான பின்னணியில் கடந்த பல மாதங்களாக யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம் சந்தியில் அமைந்துள்ள பேரவை கட்டடத்தில் ஓர் அரசியல் பள்ளி இயங்கிவருகிறது. அதில் அரசறிவியல் மாணவர்களும் செயற்பாட்டாளர்களும் வாரந்தோறும் கூடிக்கதைக்கிறார்கள்.; வகுப்புகள் நடக்கின்றன. கலந்துரையாடல்கள் நடக்கின்றன. எனினும் கட்சி சார்ந்த செயற்பாட்டாளர்கள் அவ்வரசியற் பள்ளியில் பங்குபற்றுவதற்கு பின்னடிக்கிறார்கள்.; இது பேரவையானது எல்லாத் தரப்பு அரசியல் செயற்பாட்டாளர்களையும் அரவணைக்கும் ஓர் இடை ஊடாட்டத் தளமாகச் செயற்படுவதில் உள்ள வரையறைகளை காட்டுகிறது.

இவ்வாறானதோர் தேக்கத்தின் பின்னணி—யில்தான் மறுபடியும் பேரவை ஒரு பேரெழுச்சிக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. அப்படியொரு மக்கள் எழுச்சிக்கான எல்லாவிதமான தேவைகளும் இப்பொழுது உண்டு. கூட்டமைப்புக்கு எதிரான அதிருப்தி திரண்டு வருகிறது. அரசாங்கத்தின் மீதான கோபம் திரண்டு வருகிறது.அனைத்துலக சமூகத்தின் மீதான அதிருப்தி திரண்டு வருகிறது. அரசின் உபகரணங்களாக உள்ள திணைக்களங்கள் யுத்தத்தை வேறு வழிகளில் முன்னெடுத்து வருகின்றன. ஆனால் தமிழ் மக்களோ அந்த யுத்தத்தை எதிர்ப்பதற்குத் தேவையான கூட்டுப் பொறிமுறை எதுவுமின்றி காணப்படுகிறார்கள்.

இயலாமையும் விரக்தியும் கோபமும் கொதிப்பும் அதிகரித்து வரும் இவ்வரசியற் சூழலில் எழுக தமிழுக்கான தேவை உண்டு. ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால் முதலாவதாக அது ஒரு நாள் நிகழ்வாக இருப்பதன் போதாமை. இரண்டாவதாக, முன்னைய எழுக தமிழ்களின் போது பேரவைக்குள் காணப்பட்ட கட்சிகளுக்கிடையே குறைந்தபட்ச ஒருங்கிணைப்பு இருந்தது. ஆனால் அது இப்போது இல்லை என்பது. முன்னைய எழுக தமிழ் நிகழ்வுகளின்போது ஆட்களைத் திரட்டி வீதிக்குக் கொண்டு வந்ததில் மேற்படி கட்சிகளுக்கும் பங்குண்டு. ஆனால் நடக்கவிருக்கும் எழுக தமிழில் மேற்படி காட்சிகள் அவ்வாறு முழுமனதோடு செயல்படுமா என்ற கேள்வியுண்டு. அதாவது ஒரு பேரெழுச்சிக்கான பொதுஜனக் கூட்டு உளவியல் தயாராகக் காணப்படுகிறது. ஆனால் ஒரு கூட்டுக் கட்சி உளவியல் தயாராக இருக்கிறதா? இப்படிப் பார்த்தால் நடக்கவிருக்கும் எழுக தமிழானது கூட்டமைப்புக்கு மட்டும் அல்ல, அரசாங்கத்துக்கு மட்டும் அல்ல. பேரவைக்குள் முன்பு ஒன்றாக காணப்பட்ட கட்சிகளுக்கும் சில செய்திகளை உணர்த்தும்.

அதேசமயம் பேரவையானது அதன் இயலாமைகளையும் வரையறைகளையும் ஈருடகப் பண்பையும் குறித்து தன்னைத் தானே சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டும். 2009க்கு பின் அக்காலகட்டத்தின் தேவையாக தமிழ் சிவில் சமூக அமையம் தோன்றியது. 2015 இல் அப்போது அதிகரித்த சிவில் சனநாயக வெளிக்குள் பேரவை தோன்றியது. அதாவது தமிழ் சிவில் சமூக அமையத்தின் அடுத்த



கட்ட கிளைக்கூர்ப்பே தமிழ் மக்கள் பேரவை ஆகும். கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலோடு பேரவையும் தேங்க தொடங்கிவிட்டது. இப்பொழுது பேரவை அதன் அடுத்த கட்டக் கூர்ப்பிற்குப் போகவேண்டியிருக்கிறது.

அது தேர்தலில் ஈடுபடாத ஒரு மக்கள் இயக்கமாகச் செயற்படவேண்டியிருப்பது ஏன்? எப்படி?

தேர்தல் மையக் கட்சிகள் தேர்தல் வெற்றிகளுக்காகத் தமது கனவுகளை யதார்த்தத்தை நோக்கி வளைக்க கூடும். அவ்வாறு வளையாத ஓரமைப்பே கட்சிகளின் மீது தார்மீகத் தலையீட்டைச் செய்யமுடியும். தார்மீக அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும். சனங்களின்; கொதிப்பை கனவை நோக்கி நொதிக்கச் செய்ய முடியும். ஆயின் பேரவை இதுவரைக் காலமும் அவ்வாறான ஓரமைப்பாகச் செயற்பட்டதா?

இல்லையெனில் ஏன்? இனிமேலாவது அவ்வாறு செயற்படுவதென்றால் எங்கிருந்து தொடங்கவேண்டும்?அது பேரவையின் அடுத்த கட்டக் கூர்ப்பா?அல்லது முற்றிலும் புதிதான வேறொன்றா?

தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஒரு பகுதித் தொடர்ச்சியாக பேரவை தோன்றிய போது அதில் முழு அளவு இணைய மறுத்த தமிழ் சிவில் சமூக அமையத்தைச் சேர்ந்த சில செயற் பாட்டாளர்கள் அப்பொழுது கூறிய கருத்துக்கள் பல இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளன. அந்த விமர்சனங்களையும் உள்வாங்கி பொருத்தமான தரிசனமும் அரசியல் ஒழுக்கமும் அர்ப்பணிப்பும் தியாக சிந்தையும் கொண்ட தலைவர்களும் செயற்பாட்டாளர்களும் ஒன்றிணையும் பொழுது பேரவைக்குப் பின் எதுவென்பது தெரியவரும்.

## மில்லாது இப்ராஹிம் அமைப்பின் கிழக்கு மாகாண தலைவர் கைது!



ஜம்மியத்துல் மில்லாது இப்ராஹிம் (JMI) அமைப்பின் கிழக்கு மாகாண தலைவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுள் ஒலுவில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குவதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஜம்மியத்துல் மில்லாது இப்ராஹிம் அமைப்பானது கடந்த ஏப்ரல் 21 தாக்குதலுக்குப் பின்னர் சிறீலங்கா அரசு தடை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நான் வாங்கிய ஆயுதங்களினாலேயே தமிழினம் படுகொலை செய்யப்பட்டது

## மனம் திறந்தார் நல்லிணக்கத்தின் நாயகி சந்திரிகா



என்னுடைய காலத்தில் செய்த கொள்வனவு ஆயுதங்களினாலேயே மகிந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார் என சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். களனி பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார். மேலும், கடந்த அரசாங்கத்தினை விடவும் இந்த அரசாங்கத்தில் ஊழல் மோசடிகள் குறைவாகவே இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனது அரசாங்க காலத்தில் மூன்றில் இரண்டு பகுதி நிறைவுக்குக் கொண்டுவந்திருந்த யுத்தத்தையே முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ச முடிவுக்குக் கொண்டுவந்தார். அந்த மூன்றில் ஒரு பகுதியை நிறைவு செய்ததும் தன்னுடைய காலத்தில் கொள்வனவு செய்த ஆயுதங்களினால் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சிறீலங்கா அதிபர் தேர்தலில் மோதப் போகும் ரணில் - கோத்தா?

இந்த ஆண்டு பிற்பகுதியில் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியின் சார்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும், பொதுஜன பெரமுனவின் தலைமையிலான கூட்டணியின் சார்பில் கோத்தபாய ராஜபக்சவுமே போட்டி—யிடவுள்ளனர் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐதேக தமது பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து தேசிய ஜனநாயக கூட்டணி என்ற பெயரிலும், பொதுஜன பெரமுன தமது பங்காளிகளுடன் இணைந்து மற்றொரு கூட்டணியை அமைத்தும், வரும் அதிபர் தேர்தலில் போட்டியிடவுள்ளன. ஐதேக கூட்டணியின் சார்பில் ரணில் விக்ரமசிங்க, கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச ஆகியோரின் பெயர்கள் அதிபர் வேட்பாளராக நிறுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளன.

எனினும், ரணில் விக்ரமசிங்க போட்டியில் இருந்து விலகி, கரு ஜயசூரியவை நிறுத்த முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகின. அதேவேளை, சஜித் பிரேமதாசவை வேட்பாளராக முன்னிறுத்துவதற்கு தீவிர





முயற்சிகள் நடந்து வந்தன. அதேவேளை பொதுஜன பெரமுன கூட்டணியின் சார்பில், கோத்தாபய ராஜபக்ச நிறுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையிலேயே, ரணில் விக்ரமசிங்கவும், கோத்தாபய ராஜபக்சவுமே அதிபர் தேர்தலில் மோதவுள்ளனர் என கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல் வெளி—யிட்டுள்ளது. ரணில் விக்ரமசிங்க யானை சின்னத்திலும், கோத்தாபய ராஜபக்ச மலர் மொட்டு சின்னத்திலும் போட்டியிடுவார்கள் என அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# ரணிலின் ஹெலியினால் இருவர் காயம்

பிரதமர் ரணில் விக்ரமசிங்க பயணித்த ஹெலிகொப்டரின் காற்றாடிகளில் இருந்து வீசிய காற்றில் மரக் கிளைகள் முறிந்து வீழ்ந்ததில் இருவர் காயமடைந்துள்ளனர். கதிர்காமத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக பிரதமர் சென்ற வேளையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்ரமசிங்க பயணித்த ஹெலிகொப்டரின் காற்றாடிகளில் இருந்து வீசிய காற்றில் மரக் கிளைகள் முறிந்து வீழ்ந்ததில் இருவர் காயமடைந்துள்ளனர். கதிர்காமத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக பிரதமர் சென்ற வேளையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மாணிக்க கங்கைக்கு அருகில் இருந்த மரக்கிளை உடைந்து குளித்துக் கொண்டிருந்த இருவர் மீது விழுந்தமையினால் இருவரும் காயமடைந்து கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த அனர்த்தம் காரணமாக மாத்தறை பிரதேசத்தை சேர்ந்த 53 வயதான ஜகத் மற்றும் 64 வயதான கருணாசீலி ஆகியோர் காயமடைந்துள்ளனர்.



# வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரி துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு!

அம்பலாங்கொடை, குளிகொட சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்தில் உயிரிழந்த நபர் வெலிக்கடை சிறைச்சாலையின் தலைமை அதிகாரி என அடையாளம் காணப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் 5ஜி கோபுரம் அச்சத்தில் மக்கள்



வவுனியா திருநாவற்குளம் விளையாட்டு மைதானம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 5ஜி கோபுரம் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் 5ஜி கோபுரம் என்று உறுதிப்படுத்தப்பட்டு ஆவணம் வழங்கும்பட்சத்தில் அக்கோபுரம் உடனடியாக அங்கிருந்து தூக்கி எறியப்படும் என்று வவுனியா நகரசபை உறுப்பினர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபைக்குட்பட்ட நகர்ப்பகுதிகளான பண்டாரிக்குளம், திருநாவற் குளம் ஆகிய பகுதிகளில் 5ஜி கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்கள் விளையாட்டு மைதானத்தைச் சூழவுள்ள குடும்பங்களுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படவாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றதுடன் 5ஜி கோபுர வலையமைப்பினால் உடல், உள ரீதியான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதாக ஆய்வுகள் சிலவற்றிலிருந்து தெரியவந்துள்ளது. இந்நிலையில் எமது பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கோபுரம் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அகற்றிவிடுமாறு அப்பகுதியிலுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். இவ்விடயங்கள் குறித்து வவுனியா நகரசபை உறுப்பினர் சு.காண்டீபனிடம் கேட்டபோது, திருநாவற் குளம் விளையாட்டு மைதானப்பகுதியில் அமைக்கப்பட்டு வரும் கோபுரம் 5ஜி கோபுரம் என்று தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டு ஆவணம் வழங்கும் பட்சத்தில் அக்கோபுரம் உடனடியாக அவ்விடத்திலிருந்து தூக்கி எறியப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை பண்டாரிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 5ஜி கோபுரம் குறித்து நகரசபை உறுப்பினர் கே.சுமந்திரனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள கோபுரத்தினை அகற்றுவதற் குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். இவ்வாறு நகரப்பகுதியில் மக்களுக்கு தீமையை ஏற்படுத்தும் கோபுரம் நகரசபை உறுப்பினர்களின் அனுமதியின்றி அமைக்கப்பட்டு வரும் 5ஜி வலைமைப்பின் கோபுரங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. அண்மையில் வவுனியா இறம்பைக்குளம் மயானப்பகுதியில் கோபுரம் அமைப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட வேலை அப்பகுதி மக்களின் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டதுடன் உடனடியாகவே அந்நிறுவனம் அங்கு கோபுரம் அமைக்கும் பணியைக் கைவிட்டுச் சென்றதுடன் வெட்டப்பட்ட குழியையும் மூடிவிட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசிய முன்னணி சனாதிபதி வேட்பாளர் கரு



ஐ.தே.முன்னனி சார்பில் சனாதிபதி வேட்பாளராகச் சபாநாயகர் கரு ஜயசூரியவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். அதன்படி கரு ஜயசூரிய சனாதிபதி வேட்பாளராகவும் ரணில் விக்கிரமசிங்க அடுத்த பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராகவும் போட்டி—யிடவுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள சபாநாயகர் கரு ஜயசூரிய அதற்கான பிரசார வேலைகளை மறைமுகமாக ஆரம்பித்துள்ளார். கடந்த சில தினங்களாக போட்டோஷூட் பலவற்றில் அவர் கலந்துகொண்டதோடு, அத்தனகல்லையில் உள்ள பண்டாரநாயக்க சமாதி மற்றும் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி ஆகியவற்றில் நடந்த போட்டோபோட்டோஷூட்களிலும் சபாநாயகர் கரு கலந்துகொண்ட நிலையில் குறித்த படங்கள் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றது. அதேபோல நாட்டின் பிரசித்தி பெற்ற இடங்களுக்கும் சபாநாயகர் செல்லவுள்ளார். இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணியின் சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் அவர் தனது சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதோடு, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகி அவர் சுயாதீன ஒருவராகப் போட்டியிடவுள்ளார்.

சனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராகுமாறு பிரதமர் ரணில் கேட்டுக் கொண்டதை அடுத்தே இந்த ஏற்பாடுகள் நடந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. முன்னதாக கடந்த அரசியல் நெருக்கடி கடந்த வருடம் ஏற்பட்டபோது கரு ஜயசூரிய அதனை மிக இலாவகமாக கையாண்டதால் அவருக்கு அனுபவ முதிர்ச்சியும் அரசியல் ஞானமும் இருப்பதாக பிரதமர் கருதுவதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசிய கட்சிக்குள் குழப்பம் ஒப்பந்தம் ஒத்திவைப்பு

எக்சத் ஜாதிக பக்ஷய
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய கூட்டமைப்பு உடன்படிக்கை ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திடுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாளை காலை 9 மணிக்கு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற இருந்த குறித்த நிகழ்வு காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் தேர்தலில் களமிறங்குவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி மேலும் சில அரசியல் கட்சிகளுடன் இணைவதற்கு தீர்மானித்ததுடன் அதற்காக குறித்த கட்சித் தலைவர்கள் உட்பட உறுப்பினர்களுடன் நாளை உடன்படிக்கை ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ளவிருந்தனர். குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பில் நேற்று (03) கட்சித்தலைவர்கள் மற்றும் பிரதமர் ரணில் விக்கரமசிங்கவிற்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்ற போது அதில் கருத்து மாறுபாடு காரணமாக குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## இன்னொரு தீவிரவாத தாக்குதலுக்கு வாய்ப்பே இல்லை இராணுவப் பேச்சாளர்

சிறீலங்காவில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மீண்டுமொரு தீவிரவாத தாக்குதல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏதும் கிடையாது என்றும், சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார். அமெரிக்கத் தூதரகம் தமது நாட்டுக் குடிமக்களுக்கு விடுத்துள்ள இரண்டாம் நிலை எச்சரிக்கை குறித்து, கருத்து வெளியிட்டுள்ள அவர், "மீண்டுமொரு தாக்குதல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறித்து இதுவரை எமக்கு எந்த தகவல்களும் கிடைக்கவில்லை. அவ்வாறான தகவல்கள் கிடைத்தால், அது குறித்து மக்களுக்கு அறிவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, மீண்டுமொரு தாக்குதல் நடத்தப்படாத வகையில், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்றும் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

# யாழில் வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்!

வேலையற்ற பட்டதாரிகளால் யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப் பட்டது. இந்த போராட்டம் இன்று காலை யாழ் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது. அரச நியமனம் வழங்குமாறு கோரி பட்டதாரிகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். வெளிவாரி, உள்வாரி என தரம் பிரித்து வேலை வாய்ப்பினை வழங்க வேண்டாம் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்த அரசு நல்லாட்சி அரசு என நிரூபிப்பதாயின் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்க வேண்டும் எனவும் அவர்கள் இதன்போது வலியுறுத்தினர்.



## போர்க்குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்பட மாட்டார்கள்

### மகிந்த அறிவிப்பு



தாம் மீண்டும் ஆட்சி பீடம் ஏறினால் எந்தக் காரணம் கொண்டு யுத்தத்திலே போர்க்குற்றத்தில் ஈடுபட்ட எவரையும் தண்டிக்கப்பேவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவரும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது இலங்கை சனாதிபதியாக இருந்தவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், போருக்குத் தலைமை தாங்கிய இராணுவத் தளபதியை விரும்பிய தமிழர்கள் அந்தப் போரில் பங்கேற்று சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த படையினரை ஏன் வெறுக்கிறார்கள். அந்தப் போர் வீரர்களை ஏன் போர் குற்றவாளிகள் என்று அழைக்கிறார்கள் எனவும், கருத்துத் தெரிவித்துள்ளார். நீங்கள் ஆட்சி பீடம் ஏறினால் போர்க்குற்ற விசாரணையை முன்னெடுப்பீர்களா? என்று ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு மூளைக்கும் வாய்க்கும் தொடர்பில்லாமல் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 03 ஆம் பக்கம் →

என்று ஒன்றொன்றாக கோரிக்கை வைத்திருந்தாலாவது இற்றைக்கு அரைவாசி நிர்மானங்கள் தடுக்கப்பட்டிருக்கும். ஆனால் அவ்விதமான கருமங்கள் எவற்றையுமே சம்பந்தன் ஐயா தலைமையிலான கூட்டமைப்பு முன்னெடுக்காது பின்னடித்தமைக்கான காரணம் என்ன? ஆக, பௌத்த சமய நிர்மானங்கள் தாயகத்தினை ஆக்கிரமிப்பதை நாம் எதிர்க்கவில்லை என்பது தானே பொருளாகின்றது. அவ்வாறாயின் போருக்கு பின்னரான பௌத்த ஆக்கிரமிப்புக்கள் பற்றி பேசுவதாயின் கூட்டமைப்பினரே அதற்கான பொறுப்புக்கூறலைச் செய்ய வேண்டியவர்களாகின்றனர். இதிலிருந்து இவர்கள் ஒருபோதும் விலகி நிற்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு முண்டுகொடுத்துக்கொண்டிருக்கும் கூட்டமைப்பு அடுத்த தேர்தல்களிலும் அதன் பக்கமே சாயவுள்ள நிலையில் தற்போது தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பௌத்த நிர்மானங்களை தடுத்து நிறுத்தி அகற்றுவதற்கான திராணி கூட்டமைப்பிடம் இருக்கின்றதா?

கன்னியா விவகாரத்தில் இளைஞர் சமூகத்தின் எழுச்சியின் அச்சத்தால் நீதிமன்றத்தினை கூட்டமைப்பு நாடியதே தவிரவும் இதய சுத்தியுடன் கூட்டமைப்பு செயற்பட்டிருக்கவில்லை என்பது திண்ணம். தமிழ் தேசிய அரசியல் தலைமையின் கோட்டைக்குள்ளேயே நிலைமை அவ்வாறு இருக்கையில் ஏனைய பகுதிகள் பறிபோனாலும் வெறும் கூக்குரல் சத்தத்துடன் அனைத்தும் நின்றுவிடும்.

இந்த யதார்த்தத்தை தாயக உறவுகள் புரிந்துகொண்டு பௌத்தமயமாக்கல் உள்ளிட்ட கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்கு எதிராக சனநாயக வீச்சுமிக்க போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் அவசியம் என்பதோடு தமிழர் தாயகத்திலே கட்டமைப்பு ரீதியான இன அழிப்பை செய்துவரும் அரசை கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக எந்தவொரு முன் நிபந்தனையும் விதிக்காமல் ஆதரித்த தமிழ் சக்திகளை தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இலகுவில் தீராது ஈரான் பிரச்சனை





**வேல் தர்மா**

பனாமா கால்வாய், சூயஸ் கால்வாய், ஹோர்மஸ் நீரிணை, மலாக்கா நீரிணை, பொஸ்ஃபரஸ் நீரிணை ஆகியவை முக்கிய கடல்வழி திருகுப் புள்ளிகளாகும். அதிக கடற்போக்குவரத்துள்ள இரு பெரிய கடல்களை அகலம் குறைந்த நீர்ப்பரப்பால் இணைக்கப்படும் இடங்கள் கடல்வழித் திருகுப் புள்ளிகள் எனப்படும். ஹோர்மஸ் நீரிணை எரிபொருள் வாணிபத்தில் மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகுப் புள்ளியாகும் ஒரு பாரசீக வளை குடாவையும் ஓமான் வளை குடாவையும் இணைக்கும் ஹோர்மஸ் நீரிணை ஒரு வளைந்த நீரிணையாகும். ஹோர்மஸ் நீரிணையை ஒட்டியுள்ள ஈரானிக் கடற்கரை ஒரு பிறை வடிவத்தில் உள்ளது. அப்பிறையின் உட்பகுதியில் ஹோர்மஸ் நீரிணை இருப்பதால் ஈரானின் அதிக நிலைகளில் இருந்து ஹோர்மஸ் நீரிணையூடாகச் செல்லும் கடற்கலன்கள் மீது இலகுவாக தாக்குதல் நடத்தலாம். ஈரான், ஈராக், குவைத், சவுதிஅரேபியா, பாஹ்ரேன், கட்டார், ஐக்கிய அமீரகம் ஆகிய நாடுகளில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் எரிபொருள்களில் பெரும் பகுதி ஹோர்மஸ் நீரிணையூடாகச் செல்வதால். அந்த நீரிணையில் கடற்கண்ணிகளை இடுவதாலும் ஏவுகணை வீச்சிக்களாலும் கடற்படைத் தாக்குதலாகும் அந்த நீரிணையூடாக செல்லும் கப்பல்களை ஈரான் தடுக்கலாம். உலக எரிபொருள் விநியோகத்தின் 20% ஆசியாவிற்கான எரிபொருள் விநியோகத்தின் 75% ஈரானால் தடுக்க முடியும். ஹோர்மஸ் நீரிணையில் செய்யப்படும் சிறிய குழப்பம் உலக எரிபொருள் விலையை அதிகரிக்கச் செய்யும். ஹோர்மஸ் நீரிணையூடாகச் செல்லும் எரிபொருளைத் தடை செய்வதன் மூலம் தன்மீதான பொருளாதாரத்தடையை நீக்க ஈரான் முயல்வதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது.

ஹோர்மஸ் மீது அதிக கவனம் செலுத்தும் அமெரிக்கா ஈரானின் பூகோள இருப்பு உலக எரிபொருள் விநியோகத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் அமெரிக்கக் கடற்படை ஹோர்மஸ் நீரிணையை கண்காணித்து வருகின்றது. பாஹ்ரேனில் நிலை கொண்டுள்ள அமெரிக்காவின் ஐந்தாம் கடற்படைப் பிரிவு USS Abraham Lincoln (CVN-72) என்ற விமானம் தாங்கிக் கப்பலையும் உள்ளடக்கியது. ஈரானின் ஐநூறு சிறு விசைப்படகுகளில் இருந்து ஒரேயடியாக ஒரு இலக்கை நோக்கி வீசப்படும் 400 ஏவுகணைகளில் 100 ஏவுகணைகள் அந்த இலக்கைத் தாக்கினாலே கடும் சேதத்தை ஏற்படுத்த உடியும் USS Abraham Lincoln (CVN-72) விமானம் தாங்கிக் கப்பலே செயலிழக்கச் செய்யப்படலாம். ஆனால் அதற்கு எதிராக ஈரானைச் சுற்றி வரவுள்ள அமெரிக்கப் படைநிலைகள் பலவற்றில் இருந்து வீசப்படும் ஏவுகணைகள் ஈரானில் பலத்த சேதத்தை ஏற்படுத்தும் என்பதை ஈரான் நன்கு அறியும். ஈரான் மீது அமெரிக்கா முன் கூட்டியதாக்குதலைச் செய்தால் ஈரானின் பதிலடி அதனது ஆதரவு பெற்ற தீவிரவாத அமைப்புக்கள் மூலம் அமெரிக்காவினதும் அதனது நட்பு நாடுகளினதும் நிலைகள் மீது தாக்குதல் செய்யலாம். ஐக்கிய அரபு அமீரகத்தின் அரசுறவியலாளர் ஹோமஸ் நீரிணையில் போர் மூண்டால் பாதிக்கப்படுவது அமெரிக்கா அல்ல எமது நாடுகளே என்றார். மேற்கு நாடுகளுக்கு ஹோமஸ்நீரிணையூடாக மிகவும் சொற்ப அளவு எரிபொருளே செல்கின்றது. அதில் அமெரிக்காவிற்கும் பிரித்தானியாவிற்கும் எதுவும் செல்லவதில்லை.

அமெரிக்கா அழிக! இஸ்ரேல் ஒழிக! 1979ஆம் ஆண்டு புரட்சியின் மூலம் ஈரானின் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் உலக வரைபடத்தில் இஸ்ரேல் என ஒரு நாடு இருக்கக் கூடாது என்பதும் அமெரிக்காவிற்கு அழிவு வரவேண்டும் என்பது ஈரானிய ஆட்சியாளர்கள் பகிரங்கமாக அடிக்கடி சொல்லும் வாசகங்களாகும். அப்படிப்பட்ட ஆட்சியாளர்களை அமெரிக்காவோ இஸ்ரேலோ இலகுவில் விட்டு வைக்க மாட்டாது. ஈரானிய ஆட்சியாளர்கள் ஈராக், சிரியா, லெபனான், எகிப்து, அல்ஜீரியா, லிபியா ஆகியவற்றை தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்து தாம் ஒரு பிராந்தியவல்லரசாக வேண்டும் என்ற கனவுடன்செயற்படுவதாக அமெரிக்க ஊடகங்கள் குற்றம் சாட்டுகின்றன;

மிகச் சிறந்த நாவன்மையுடன் விவாதங்களை முன்வைக்கும் ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் மொஹமட் ஜவார்ஜரீஃப் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. அதே வேளை ஈரானுடன் இணைந்து விரைவில் ஒரு வளைகுடாவில் ஒரு கடற்போர் ஒத்திகை செய்வதற்கான குறிப்பேட்டில் ஈரானும் இரசியாவும் கையொப்பமிட்டுள்ளன. சிரியாவில் இரசியாவின் தலையீடு அமெரிக்காவிற்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தி இறுதியில் பஷார் அசாத்தை அசைக்க முடியாமற்போனதோ அதேபோல் ஈரானும் பாதுகாக்கப்படலாம்.

ஈரானிய புள்ளி விபர நிலையத்தின் தகவல்களின்படி 2018—ம் ஆண்டு ஈரானின் இடுக்கண்சுட்டி (misery index) 19.4% ஆக இருந்தது, இப்போதுஅது 39% ஆக உயர்ந்துவிட்டது. ஈரானில் உள்ள சமையற்காரர்களின் தகவல்களின்படி ஈரானில் உணவு பொருட்களின் விலை 2019இல் ஐம்பது முதல் நூறு விழுக்காடு அதிகரித்துள்ளது. ஈரானியப் பொருளாதாரம் 2019 இல் 6% வீழ்ச்சியடையும் என பன்னாட்டு நாணய நிதியம் (IMF) மதிப்பிட்டுள்ளது. இவையாவற்றிற்கும் காரணம் ஈரானுடன் ஐந்து வல்லரசு நாடுகளும் ஜேர்மனியும் செய்து கொண்ட யூரேனியம் பதப்படுத்தல் தொடர்பான உடன்படிக்கையைஅமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஒரு தலையாக இரத்து செய்து ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்தமையே. மற்ற நாடுகள் அல்லது தனியார் நிறுவனங்கள் ஈரானுடன் பொருளாதாரத் தொடர்புகள் வைத்திருந்தால் அவற்றின் மீதும் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்ற மிரட்டலையும் அமெரிக்கா விடுத்தது. இதை ஈரான் மீதான உச்ச அழுத்தம் என்றார் டிரம்ப்.

அமெரிக்காவின் உச்ச அழுத்தத்திற்கு ஈரானின் பதிலடிகள் 1. தனது யூரேனியப்பதப்படுத்தலை அதிகரித்தது 2.அமெரிக்காவின் ஒரு ஆளில்லா விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது 3. பிரித்தானியக் கொடியுடன் பயணித்த இரண்டு எரிபொருள் தாங்கிக்கப் பல்களை தடுத்து வைத்தது. 4.அமெரிக்க உளவாளிகளை ஈரானில் கைது செய்தது. 5. ஈரானின் ஆதரவுடன் செயற்படும் ஹூதி போராளிகள் சவுதி அரேபியாவின் எரிபொருள் குழாய்கள் மற்றும் விமான நிலையங்கள் மீது தாக்குதல் செய்யத்தூபமிட்டது. 7.சியாபோராளிகள் அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய நிலைகள் மீது தீவிரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாகியது. இவை அமெரிக்காவிற்கு மிகச்சிறிய பாதிப்புக்களையே ஏற்படுத்தின. ஆனால் டிரம்பின் உச்ச அழுத்தத்தால் ஈரான் மேற்காசியா மற்றும் வட ஆபிரிக்காவில் உள்ள தீவிரவாத அமைப்புக்களுக்கு வழங்கும் நிதி பெருமளவில் குறைந்துள்ளமை டிரம்பிற்கு கிடைத்த வெற்றி என அவரது எதிரிகளே ஒத்துக்கொண்டுள்ளனர். ஈரானின் பூகோள அமைப்பே ஒரு படைக்கலனாகும்.

## அமெரிக்கா - துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் பலி

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் வணிக வளாகத்தில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் பரிதாபமாக பலியாகினர். அமெரிக்காவின் டெல்சாஸ் மாகாணத்தின் எல் பசோ பகுதியில் அமைந்துள்ளது வால்மார்ட் வணிக வளாகம். வார இறுதி விடுமுறை என்பதால் வணிக வளாகத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வணிக வளாகத்தின் உள்ளே திடீரென புகுந்த மர்ம நபர் அங்கிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுடத்தொடங்கினான். இந்த திடீர் தாக்குதலால் பொதுமக்கள் அலறியடித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடினர்.




மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் பலியாகினர் என அம்மாநில கவர்னர் கிரெக் அபார்ட் தெரிவித்துள்ளார். மேலும் 25க்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை போலீசார் மடக்கிப் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர் என தெரிவித்தார்.

## சிரியா : வெடிவிபத்தில் 31 வீரர்கள் பலி

சிரிய விமானப்படை தளத்தில் உள்ள ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 31 வீரர்கள் பலியாகினர். சிரியாவில் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்து வருபவர்கள் மீது அந்நாட்டு இராணுவம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இங்கு தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் வெடிபொருட்கள் மற்றும் பல்வேறு ஆயுதங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இந்த விமானப்படை தளத்தில் உள்ள ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 31 வீரர்கள் பலியானதாகவும் பலர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் சிரிய மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அங்கு காலாவதியான வெடிப்பொருட்கள் மற்றும் ஆயுதங்களை அகற்றும் பணியில் வீரர்கள் ஈடுபட்டிருந்த போது இந்த விபத்து நடைபெற்றதாக கூறப்படுகிறது.




தமிழ்நாடு சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள கீழடியில் 5—ம் கட்ட அகழாய்வு தொடங்கியுள்ளது. முருகேசன், கருப்பையா, மாரியம்மாள், போதகுரு ஆகியோரது நிலத்தில் இந்த அகழாய்வு நடந்து வருகிறது. கடந்த மாதம் 13ம் திகதி தொடங்கப்பட்ட அகழாய்வில் சுவர், வட்டப்பானை உள்ளிட்டவைகள் கண்டறியப்பட்ட நிலையில் தற்போது உறைகிணறு, தண்ணீர் குடிக்க பயன்படுத்தப்படும் ஜக்—மூடி உள்ளிட்டவைகள் கிடைத்துள்ளன. உறைகிணறுகள் கண்டறியப்பட்டுள்ளதால் இப்பகுதியில் 2ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் குடியிருப்புகள் இருந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உறைகிணறுகள் அனைத்தும் 5 முதல் 7 அடி உயரம் வரையே இருப்பதால் 2ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தண்ணீர் 5 அடியிலேயே கிடைத்திருக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் உறைகிணறுகளை தொழில்நுட்ப ரீதியில் அமைக்கப்பட்டு அதனை தமிழர்கள் பாதுகாப்பாக பயன்படுத்தியதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடந்த நான்கு கட்ட அகழாய்வில் மூன்று கிணறுகள் கண்டறியப் பட்ட நிலையில் தற்போது நான்காவதாக உறைகிணறு கண்டறியப்பட்டுள்ளது. எனவே இப்பகுதியில் குடியிருப்புகள் இருந்ததற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அறிவுக்கூர்மையில் ஐன்ஸ்டீனை விஞ்சிய 11 வயது தமிழ்ச் சிறுமி

ஒருவரது நுண்ணறிவுக்கூர்மையை (IQ - Intelligence Quotient) அளவிட நடத்தப்படும் தேர்வில் மிக அதிகபட்ச மதிப்பீட்டை பெற்று பிரிட்டனில் வாழும் 11 வயதான ஹரிப்பிரியா எனும் தமிழ்ச் சிறுமி சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம், உலகின் தலைசிறந்த அறிவியலாளர்களாக அறியப்படும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங்ஸ் உள்ளிட்டவர்களை விட மிகுந்த அறிவுக்கூர்மை பெற்றவர் எனும் பெருமையை ஹரிப்பிரியா பெற்றுள்ளார். கல்வி மட்டுமின்றி, பன்மொழித்திறன், ஆடல், பாடல், இசை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கி வரும் பதினொரு வயதே ஆகும் ஹரிப்பிரியாவை பிபிசி தமிழ் நேர்காணல் செய்தது. ஒருவரது அறிவுக்கூர்மையை அளவிடுவதற்கு பல்வேறு விதமான சோதனைகள்/தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இது நாட்டுக்கு நாடு அல்லது நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடுகிறது. இங்கு அறிவுக்கூர்மை என்பது ஒரு விடயத்தை எவ்வளவு விரைவாக உள்வாங்கிக் கொள்வது என்பது மட்டுமின்றி, சிக்கல்களை தீர்ப்பதில் மூளையின் செயற்பாட்டு திறனை அடிப்படையாக கொண்டுள்ளது.

அதன்படி, உலகின் புகழ்பெற்ற அறிவுக்கூர்மை சோதனை கூடங்களில் ஒன்றாக திகழும் பிரிட்டிஷ் மென்சாவின், 'காட்டல் III H (Cattell III B)' எனும் தேர்வில் பங்கேற்ற பிரிட்டன்வாழ் தமிழ்ச் சிறுமியான ஹரிப்பிரியா, அத்தேர்வின் அதிகபட்ச சாத்தியமுள்ள மதிப்பீடான 162 பெற்று சாதனைப் படைத்துள்ளார். அதாவது, ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங்ஸ் போன்ற பிரபல அறிவியலாளர்களின் அறிவுக்கூர்மை மதிப்பீட்டை விட இவர் இரண்டு எண்கள் அதிகமாக பெற்றுள்ளார். அதே போன்று, பிரிட்டிஷ் மென்சாவின் மற்றொரு அறிவுக்கூர்மை தேர்வான 'கல்ச்சர் பார் (Culture Fair Scale)' என்பதிலும் அதிகபட்ச மதிப்பீடான 140ஐ பெற்று அசத்தியுள்ளார்.





# ரஷியாவிலிருந்து எட்டே நிமிடத்தில் சீனாவிற்குப் பயணிக்கும் கேபிள் கார்!!

ரஷியாவில் இருந்து சீனாவிற்கு வெறும் எட்டு நிமிடத்தில் செல்லும் கேபிள் கார் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இரண்டு நாடுகளுக்கு இடையே அமைக்கப்படும் முதல் கேபிள் கார் என்ற பெருமையை இது பெறுகிறது. சீனாவின் வடகிழக்கு மாகாணமான ஹெய்ஹி (Heihe) யில் இருந்து ரஷியாவின் ப்ளாகோவெஷ்சென்ஸ்க் (Blagoveshchensk) நகரத்திற்கு இடையே ஓடுகிறது ஆமூர் நதி. இதற்கு மேலே தான் இந்த கேபிள் கார் பயணிக்க இருக்கிறது. பயணிகள் இந்த இரு நகரத்தையும் கண்டவாறே பயணிக்கலாம். டச்சு வடிவமைப்பு நிறுவனமான UNStudio தான் இந்த பிரம்மாண்டத்தை வடிவமைத்துள்ளது. ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு ஒருமுறை இந்த கார் இயக்கப்படும். ஒருமுறைக்கு குறைந்தபட்சமாக 60 பேர் பயணிக்கலாம். பயணிகள் தங்களது உடமைகளை எடுத்துவரவும் அனுமதி உண்டு.

# புகைபிடித்தால் பெண்களுக்கு மாரடைப்பு வாய்ப்பு அதிகம்

சர்க்கரை நோய் அல்லது ரத்த அழுத்தமுள்ள பெண்கள் புகைப்பிடித்தால், அவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு ஆண்களைவிட அதிகம் உள்ளதாக இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. ஆண்களுக்கு அளிக்கப்படும் அதே சிகிச்சையும், புகைப் பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கான ஆதரவும் பெண்களுக்கு வழக்கப்பட வேண்டுமென்று அந்த ஆராய்ச்சி முடிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் இங்கிலாந்தை சேர்ந்த 5 லட்சம் பேரின் 'பயோ பேங்க்' தரவுகள் பயன்படுத்தப்பட்டன.

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட 7 வருட காலத்தில் 5,081 பேருக்கு முதல் முறையாக மாரடைப்பு ஏற்பட்டது. அதில் மூன்றில் ஒருவர் பெண்ணாக இருந்தார். அனைத்து வயது ஆண்களுக்கும் ஏற்படுவதைவிட பெண்களுக்கு குறைந்தளவே மாரடைப்பு ஏற்பட்டாலும், சில ஆபத்து காரணிகள் பெண்களில் அதிக அளவு தாக்கத்தை ஏற்படுத்துவது தெரியவந்துள்ளது. புகை பிடிக்காத பெண்களை விட புகை பிடிக்கும் பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கு 3 மடங்கு வாய்ப்பிருப்பதாக இந்த ஆராய்ச்சியின் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால், ஆண்களில் 2 மடங்கு மட்டுமே ஆபத்தை கூட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர் ரத்த அழுத்தம் கொண்ட பெண்களுக்கு ஆண்களை விட 83 சதவீதம் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. மேலும், முதல், இரண்டாம் வகை சர்க்கரை நோயுடைய ஆண்களை விட பெண்களுக்கே அதிக அளவு பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் இந்த ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது. பாலினம் சார்ந்து இந்த பாதிப்புகள் எப்படி மாறுபடுகின்றன என்பது குறித்து தங்களுக்கு இதுவரை தெரியவில்லை என்றும், ஆனால் உயிரியல் காரணிகள் முக்கிய காரணமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



உதாரணமாக, மோசமான உணவு முறை, வாழ்க்கைப்போக்கின் காரணமாக ஏற்படும் 2—ம் வகை சர்க்கரை நோய் கொண்ட பெண்களுக்கு ஆண்களை விட இதயம் சம்பந்தமான பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. தங்களுக்கு இதயம் சம்பந்தமான பிரச்சினை ஏற்பட்டுள்ளதை பெரும்பாலான பெண்கள் உணருவதில்லை என்றும், அறிந்தவர்கள் சரியான மருத்துவ சிகிச்சையை பெறுவதில்லை எனவும் இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

பெண்களை விட ஆண்களுக்கே அதிக அளவு மாரடைப்பு ஏற்பட்டாலும், இங்கிலாந்தில் பெண்கள் அதிக அளவு உயிரிழப்பதற்கு இதய நோயே காரணமாக உள்ளதென்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இதற்காக பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்கள் நடத்தப்பட்டாலும், பெரும்பாலான பெண்களுக்கு ஆபத்தின் வீரியம் புரியவில்லை என்றும் ஆராய்ச்சி குழுவினர் கூறுகிறார்கள்.